


# சேவைத் திலகம்

## திருமதி விமலா மணிவாசகன்

வெளியீடு: சகோதரர்கள்

# உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க...

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.

அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள்.

எந்த விஷயத்தையும், பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள், விட்டுக் கொடுங்கள்.

சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.

நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள், குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.

உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.

மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.

அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.

எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.

அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.

உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.

மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.

மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.

புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.

அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவங்க  முன் வாருங்கள்.

*– தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி*



# சேவைத் திலகம்

## திருமதி விமலா மணிவாசகன்

உ

சிவமயம்

# விநாயகர் வழிபாடு



### விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
    அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
    மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
    சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
    கணபதி யீச்சரங் காமுறவே.

## திருவாசகம்

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நாயகனே போற்றி யேழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை  அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே!

# நவராத்திரி நாயகியே



நவராத்திரி நாயகியே நடந்தாய் அகண்ட விளக்கேற்ற
விளக்கேற்றி நீ கொடுத்தாய் எங்கள் வாழ்வில் ஒளி பிறக்க

ஜெய ஜெய தேவி, தேவி பராசக்தி மருவூர் அம்மாவே
அம்மா குரு வடிவாகி ஒளி வடிவானாய் எங்களை காத்தருளே.
நவ...

மண்ணாலே ஒரு விளக்கு மலரும் திசையே தென்கிழக்கு
அம்மா நீ மனசு வைத்தால் தீரும் ஊழ்வினை எனும் கணக்கு
ஜெய... நவ...

அகலோ இந்த உலகம்மா அதிலே எண்ணெய் நாங்களம்மா
திரியோ எங்கள் உயிர் – அம்மா அதை ஏற்றுவதோ உன் விழியம்மா
ஜெய... நவ...

அகிலாண்ட நாயகியே அகண்டம் ஏற்றி தருவதற்கே
பங்காரு வரவழைத்தாள் பாலகன் மேனியில் இடம் பிடித்தாய்
ஜெய... நவ...

காணாத ஒரு நாகம் அம்மா மேனியில் அரங்கேறும்
பூப்போல திரி தீண்ட பூமிக்கே வெளிச்சம் அது போடும்
ஜெய... நவ...

மழை வேண்டும் மழை வேண்டும் மருவூராளே மழை வேண்டும்
என ஏங்க ஒரு அகண்டம் தந்த உன் மனமோ பிராமாண்டம்
ஜெய... நவ...

முக்கூட்டு எண்ணெய்களாம் ஆணவம் கன்மம் மாயங்களாம்
அதை வார்த்தோம் – அகண்டத்திலே ஊற்றிய கைகளில் பாரமில்லை.
ஜெய... நவ...
தணியாத ஊழ்வினையோ தண்ணீர் ஊற்ற அணைந்திடுமோ அம்மா
உன்
அகண்டத்திலே தணிந்தது மறைந்தது பாவங்களே.
ஜெய... நவ...

தீராத நோய்களம்மா தீர்த்தது அகண்ட எண்ணெயம்மா
மருவூரின் மருத்துவச்சி காணிக்கை உனக்கு இந்த பிறவியம்மா
ஜெய... நவ... நவ...

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் ஓம், ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் ஓம், ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

## ஆதிபராசக்தியே ஆனந்த ரூபினியே

ஆதிபராசக்தியே ஆனந்த ரூபினியே
மருவூர் எழுந்தவளே
அம்மா அவயம் தந்தருளே

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் – பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

அம்மா தாயே அருள் புரிவாயே
நவராத்திரி நாயகியே எங்கள் ஆதிபராசக்தியே

நலம் தரும் நாயகியே அம்மா நவராத்திரி நாயகியே
மலைமகள் அலைமகள் கலைமகள் எனவே
மருவூர் எழுந்தவளே அம்மா அவயம் தந்தருளே

தானெனும் ஆணவம் பாடிய அசுரரை
பாணத்தில் கொய்தவளே
கலியுகம் புதுமுகம் மருவூர் கொண்டாய் (2)
கோமள கொற்றவையே – அம்மா
உன் சரணாகதியே

யாழியின் கொடி கொண்டு காளியின் முகம் கொண்டு
கனலென எழுந்தவளே
துர்க்கா என்றுனைத் துதித்து மகிழ்ந்தோம் (2)
ஆதிபராசக்தியே அம்மா அதர்வன சௌந்தரியே

பாலகன் நாவினில்
பாத வினோதங்கள் பதித்த பராசக்தியே
இருண்டவர் கண்களில் அகண்டத்தை ஏற்றும் 2)
அம்மா ஈஸ்வரியே உந்தன் அடி மலர் சரணங்களே

மாடங்கள் மகுடங்கள் ஆடக பொன் என
அனைத்திலும் நிறைந்தவளே
திருவூர் இதுவென மருவூர் நுழைந்தாய் (2)
தாயே இலக்குமியே அம்மா வளம் நலம் தந்தருளே

தாலியின் நாயகி ஆதியின் பாதி நீ என்முகம் கொண்டவளே
தாண்ய சந்தானம் தனம் என நிறைவாய் (2)
செவ்வாடை உடுத்தையிலே - அம்மா
சிவந்த சுமங்கலியே

பாற்கடல் ஆடிய பங்கய பசுங்கிளி அம்மா ஸ்ரீதேவி
ஓம்சக்தி தீபத்தை ஓரடி வைத்தாய் (2)
பலபடி உயருகிறோம் - அம்மா
சொன்னபடி வளருகிறோம்

அபிநய சரஸ்வதி அருந்தமிழ் நாயகி
கலைகளின் தாயகமே
வா நீ எனவே கானம் இசைத்தோம் (2)
கலைமகளாய் வருக - அம்மா
ஞான பலம் தருக

ஆரம்பப் பள்ளியும் பொறியியற் கல்வியும்
பலப்பட தந்தவளே
மாணிக்க வீணையைக் காணிக்கையாய்த் தந்து (2)

மாணவர் கானம் செய்தாய் - அம்மா
மருந்தாளும் கல்வியும் தந்தாய்

ஒன்பது கோள்களும் ஒன்பது நாட்களும்
ஒரு வழிப் பாதையிலே
அகண்டத்திலே இந்த அண்டம் சிவந்தது (2)
குளிர வைப்பாய் அம்மா - மனம்
குளிர வைப்பாய் அம்மா

## குரு வருவாரா என்...



குரு வருவாரா என் குரு வருவாரா
அருள் தருவாரா - எமக்கு
அருள் புரிவாரா

வெள்ளை ஆடை உடுத்துகிட்டு
குரு வருவாரா - நம்
வேதனையை தீர்த்து வைக்க குரு வருவாரா
குரு வருவாரா...

செவந்த ஆடை உடுத்துகிட்டு
குரு வருவாரா - நம்
சிந்தையிலே கொலுவிருக்க குரு வருவாரா
குரு வருவாரா...

பசும்பாலைக் கறந்து வைத்தேன்
குரு வருவாரா - அதைப்
பாங்குடனே அருந்திடவே குரு வருவாரா
குரு வருவாரா...

பாமாலை தொடுத்து வைத்தேன்
குரு வருவாரா - என்
பாவத்தையே போக்கிடவே குரு வருவாரா
குரு வருவாரா...

பூமாலை தொடுத்து வைத்தேன்
குரு வருவாரா - அவர்
புகழ் மாலை ஏற்றுக் கொள்ள குரு வருவாரா
குரு வருவாரா...

அவதாரத் திருநாளில்
குரு வருவாரா - நல்ல
அருள் பார்வை ஒளிவீசி குரு வருவாரா
குரு வருவாரா...

ஆடிபூர நன்னாளில்
குரு வருவாரா - இந்த
ஆடி அடங்கும் வாழ்கையிலே சுகந்தருவாரா

குரு வருவாரே - என் குரு வருவாரே
அருள் தருவாரே எனக்கு அருள் புரிவாரே

குரு வருவாரே - நம் குரு வருவாரே
அருள் தருவாரே நமக்கு அருள் புரிவாரே

# ஆடுக ஊஞ்சல்...

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே! அம்மா தாயே ஆடுகவே!
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே! அம்மா தாயே ஆடுகவே!

மருவத்தூர் வாழும் மருவரசி
மனக்குறை எல்லாம் தீர்த்திடுவாய் - உன்
திருவடி தேடி வருபவரைத்
திருவருள் புரிந்தே காத்திடுவாய்

உந்தன் அடிமை பங்காரு
உருவத்தில் நீயும் இருக்கின்றாய் - என்
உள்ளத்தில் நினைத்த அத்தனையும்
உன்னிடம் வந்தால் சொல்கின்றாய்

வெஞ்சினம் கொண்ட மனிதரெல்லாம்
அஞ்சனம் கேட்டால் மாறிடுவார் - அவர்
வேதனை சோதனை யாவையுமே
வேப்பிலைக் காற்றில் பறந்திடுமே!

எங்கள் ஆதிபராசக்தி
எங்கும் இருப்பது உன்சக்தி - உன்
மஞ்சள் குங்கும மகிமையினால்
மங்கல வாழ்வு மலர்ந்திடுமே!

கலியுகம் காக்கும் கண்மணியே!
கண்களில் இருக்கும் கருமணியே - உன்
ஆலயமாம் மேல் மருவத்தூர்
வந்தவர்க்கெல்லாம் வளம் பெருகும்

அம்மா உன்னை அடிபணிந்தேன்
அனைத்தும் நீ தான் என்று வந்தேன் - கடைக்
கண்ணால் என்னைப் பார்த்திடுவாய்
காலம் முழுவதும் துணையிருப்பாய்

தானாய்த் தோன்றி வந்தவளே
தர்மத்தைக் காக்கும் தலைமகளே - நான்
தஞ்சம் என்றே உனையடைந்தேன்
தாயே என்னைக் காத்திடுவாய்

அன்னை தேவி பராசக்தி
என்னைப் படைத்தது உன் சக்தி
வாழ்வைத் தந்து வளம் தந்து
வாழ்க்கைக் கடலின் கரையேற்று

ஓங்காரப் பொருள் நீ தானே
உலகம் என்பதும் நீ தானே
காணும் இயற்கைக் காட்சிகளும்
காற்றும் மழையும் நீ தானே!

அம்மா தாயே உனைவேண்டி
அழுதிடும் என்னைத் தாலாட்டி
அன்புடன் ஞானப் பாலூட்டி
அகத்தின் இருளைப் போக்கிடுவாய்!

உள்ளக் கோயில் உன் கோயில்
உயிரும் மூச்சும் உன் வடிவம்
பேச்சும் செயலும் உன் செயலே
பெருகட்டும் உந்தன் பேரருளே!

கோரிய வரங்கள் அத்தனையும்
கொடுக்கும் தெய்வம் நீதானே - உன்
திருவடி தேடி வருபவரைத்
திகழுடன் வாழ்ச் செய்திடுவாய்

குழந்தை உள்ளம் கொண்டவளே
குன்றாப் புகழைப் பெற்றவளே
உலகம் முழுவதும் நிறைந்தவளே
உண்மையின் தத்துவம் நீதானே!

# குமரகுருபர சுவாமிகள் அருளிய சகலகலா வல்லி மாலை



**உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்**

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
　　　தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
　　　லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
　　　தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
　　　சகல கலாவல்லியே!

**நாற்கவி பாட நல்லருள் தருவாய்**

நாடும் பொருட்சுவை சொற்சுவை
　　　தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
　　　வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
　　　கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
　　　சகல கலாவல்லியே!

## கலைமகள் அருளிற் குளிக்க விரும்புதல்

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே!

## கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும்பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!

## நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மனமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

## பண்ணும் பரதமும் நல்கிட வேண்டுதல்

பண்ணும் பரதமும் கல்வியுந்
    தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
    காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
    கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
    சகல கலாவல்லியே!

## பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்

பாட்டும் பொருளும் பொருளாற்
    பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
    காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
    லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
    சகல கலாவல்லியே!

## சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்

சொல்விற் பனமு மவதான
    முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
    வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
    முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
    சகல கலாவல்லியே!

## சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாபம்புயத் தாளே
சகல கலாவல்லியே!

## மன்னர் தன்னையும் பணியச்செய்வாய்

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட ளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாய்
விண்கண்ட தெய்வம் பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போல்
கண்கண்டதெய்வ முளதோ
சகல கலாவல்லியே!

- **“ இசை, நடனம், ஓவியம், சிற்பம், மருத்துவம், பொறியியல் என்று ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவருக்கும் ஈடுபாடு இருப்பது போல, மனிதனுக்குத் தெய்வீகத் துறையில் ஈடுபாடு தேவை. ஆன்மிகத்துறையில் உங்களுக்கு விடாமுயற்சி தேவை.”**

***– ஆன்மிககுரு அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா***

# மருவூர் மகான்
# ஆன்மிக குரு அருள்திரு பங்காரு அம்மா

**சக்தி கௌரி விமலேந்திரன்**



சமய வரலாற்றிலே எத்தனையோ சித்தர்கள் ஆற்றிய அற்புதங்களைப் பற்றி படித்துள்ளோம். சைவத்தின் சிறப்பு அறங்களையும் சிவாகமத்தையும் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் அருளியுள்ளனர். திருமந்திரம் என்ற மிகப் பெரிய பொக்கிஷ நூலை எமக்கு தந்த திருமூலர், அதில் ஆதிபராசக்தி முதன்மைத் தத்துவமாக இருப்பதை விபரித்துள்ளார். ஒரு நிலையில் சக்தி சிவனுக்கு தாயாகிறாள். இன்னும் ஒரு நிலையில் சிவசக்தி என்ற பெயரில் மனைவியாகிறாள். வேறொரு நிலையில் மகளாகிறாள். சிவனுக்கே தாயாக விளங்கும் தத்துவப் பொருளாக திகழ்பவள் ஆதிபராசக்தி!

சித்தர்கள் கண்ட இந்த பேருண்மையை இன்று மேல்மருவத்தூ ரில் பங்காரு அடிகளாரை தன் கடமையை நிறைவேற்ற அன்னை ஆதிபராசக்தி கோபாலநாயக்கரிடமிருந்து தத்தெடுத்துக் கொண்டாள்.

"இன்று நான் அடிகளாராக அவதரித்து உலவி வருகிறேன். உங்களுடைய ஆதாரத்துக்காகத்தான் நான் அடிகளாராக அவதாரம் எடுத்து வந்துள்ளேன்" என்று அன்னை ஆதிபராசக்தி அருள்வாக்குத் தந்தாள். ஆனால், அதை யாரும் நம்ப மறுத்தார்கள். சமுதாய வளர்ச்சிக்குத் தக்கபடி அடிகளாரின் ஆற்றலை வெளிப்படுத்துவேன் என்றாள் அன்னை. அவதாரம் எடுத்த அடிகளார் மானுடர்தானே! அவரை எப்படி தெய்வமாக வணங்கலாம் என்பது பலரின் கேள்விக்கணை. இராமர் அவதார புருஷன். இதை யார் உணர்ந்தது? தாய் கோசலைக்குத் தெரியாது. தந்தை தசரதனுக்கும் தெரியாது.

ஆனால், விசுவாமித்திரருக்குத் தெரியும். அகத்தியருக்குத் தெரியும். மகரிஷிகள் அத்தனை பேருக்கும் தெரியும்.

கண்ணன் மானுடன்தானே! விதுரர், பீஷ்மர் போன்றவர்களைத் தவிர வேறு யாருக்கு கண்ணனைப்பற்றித் தெரியும். இயேசுவும் மானுடன்தான். அன்று அவரைத்தெய்வமாக யாரும் நம்பவில்லை. ஏற்கவும் இல்லை. இவர்தான் தேவகுமாரன் என கூறியவர் “ஜான் “என்ற ஞானி. கடவுள் எப்படி மானுடனாக முடியும்? இராமர், கண்ணன், இயேசு எப்படி கடவுளானார்கள். ?

மனிதகுலம் தறிகெட்டோடும் தருணத்தில் அவர்களை நல்வழிப்படுத்தத்தான் இறைவன் மானுடனாக அவதாரம் எடுக்கிறான். அந்த அவதாரத்தின் மூலம் இறைவனது பெருமையை உணர வைக்கிறான். மனித உடலெடுத்த இறைவன் எப்படி மனிதர்களை நல்வழிப்படுத்துகிறான். எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்குகிறதோ அப்போது நான் அவதரிக்கிறேன் என கீதையில் கண்ணன் சொல்லவில்லையா? அப்படித்தான் அடிகளாரும்.!

ஓம் சக்தி என்ற பிரணவ மந்திரத்தின் உயிர் நாடியாக விளங்கும் அன்னை ஆதிபராசக்தியின் அவதாரமாக நம்மிடையே உலவிவருகிறார் அருள்திரு பங்காரு அடிகளார்.

ஒரு குருவால்தான் எம்மை வழிநடத்த முடியும்.ஐம்புலன்களை அடக்கும் உபாயத்தை கற்றுத் தருபவர் குரு. மனதில் இறைஞானத்தைப் பதிய வைப்பவர் குரு. ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி பக்குவப்படுத்தி துரியாதீத ஆனந்தத்தை தருபவர் குரு. அட்டமாசித்திகளைப் பெற உதவுபவர் குரு. உடம்பை அழியாமல் காக்கும் உபாயங்களை அறிவிப்பவர், இறைவனிடத்தில் ஆன்மாகளைச் சேர்த்து முக்திக்கு வழிகாட்டுபவர் குரு. அத்தகைய குருவை இறைவனாக எண்ணி போற்ற வேண்டும். குருவை ஏற்றுக்கொண்டுவிட்டால் வேறு சிந்தனையின்றி நாம் இறைவனுடன் ஒன்றுபட வழியுண்டாகிறது. குருவின் அருளால் பயனடந்தவர்கள் பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை. குருவின் அருளால் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவிப்பவனுக்கு மரணம் கூட இல்லை.

தனது குருவை மானிடனாகப் பார்க்கும்போது எந்த பிரார்த்தனையும் பக்தியும் பயன்தராது. குருவை தெய்வமாக கருதினால் அவன் விரும்பும்

வரங்களையெல்லாம் தெய்வம் குருமூலமாக செய்யும். ஓர்குரு கங்கை நதிக்கு சமமானவர். கங்கையில் எத்தனை அழுக்குகள் கலந்தாலும் அதன் புனிதம் குறையாது. அதுபோல எந்த நிந்தனையாலும் வசைகளாலும் ஒரு குரு பாதிக்கபட மாட்டார்.

ஆதிபராசக்தி பெண் தெய்வம். அந்தப் பெண் தெய்வம் எப்படி ஆணாக உலாவரும் என்று எத்தனை பேர் ஆராய்ச்சி செய்கிறார்கள். “எங்கள் சிற்றறிவுக்கு எட்டாத ஒரு விடயத்தை நாம் ஆராயக் கூடாது” என்பது அன்னையின் அருள்வாக்கு. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தவேண்டுமே தவிர, அதை ஆராய்ந்து பார்த்து வீண்வாக்குவாதங்கள் செய்து, எம்காலத்தை வீணடித்து பயனற்ற வாழ்வு வாழாமல், அன்னையின் அருள்வாக்குப்படி நடப்பதே சிறப்பு.

அடிகளார் மூலம் பரம்பொருளான ஆதிபராசக்தி வாழ்க்கையில் நம்பிக்கை, அன்பு, பக்தி, எளிமை என்பவற்றை எப்படி வளர்க்கிறாள். அடிகளாருடன் பேசிப்பாருங்கள். தெய்வம் பேசுகிறது என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. அந்த ஓர் உணர்வு எம்முள் எழும்போது நாம் இந்த உலகில்தான் இருக்கிறோமா என எண்ணத் தோன்றுகிறது. அந்த சில வினாடிகள், நிமிடங்கள் எம் உடல் பூமியில். உணர்வு கடவுளிடம்.

இறைவன் குருவாக வந்து ஞானம் புகட்டிய வரலாறு எல்லோருக்கும் தெரியும். சனகாதி முனிவருக்கு சிவன் குருவாக வந்து சின்முத்திரை காட்டினார். மாணிக்க வாசகருக்கும் சிவன்தான் குரு. ஔவையாருக்கும் விநாயகர் குருவல்லவா? அருணகிரியின் குரு முருகன்தானே. சிவனுக்கே தாயாக விளங்கும் அன்னை ஆதிபராசக்தி, அடிகளார்க்கு குரு. அடிகளார் எமக்கு குரு. இது நாம் செய்த பாக்கியமல்லவா? உயிர்கள் அனைத்தையும் தன்னுயிராக எண்ணி உலகில் அன்பு சமாதானம், சகிப்புத்தன்மை, சாதி சமய, இன மொழி நாடு என்ற எல்லைகளைக் கடந்து, மனிதாபிமான உணர்வை ஒற்றுமையை வளர்க்கும் குரு எங்கள் அடிகளார்.

அடிகளார் என்ற ஆலமரம் எத்தனை விழுதுகளுடன் கம்பீரமாக நிற்கிறது. எழுத்தறிவித்தவன் இறைவன். இதற்கு சான்றாக மருவூரில் ஏழை எளிய மக்களுக்கு எத்தனை பள்ளிக்கூடங்கள். பல்கலைக்கழகங்கள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை நிரூபிக்க எத்தனை மருத்துவமனைகள். வறிய சமூகத்துக்காக எத்தனை அறப்பணிகள் அத்தனையும் மருவூர் ஆன்மிகத்தில். பெண்களை சக்திமயமாக்கி

பெண் சமுதாயத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்தது மருவூர் ஆன்மிக சக்தி. பெண்களுக்கு முக்கியத்துவம் தந்தது ஆதிபராசக்தி சித்தர்பீடம் மட்டுமே!

"உடலில் இரத்தம் ஒன்று, உஷ்ணம் ஒன்று, உப்பு ஒன்று, காற்று, தண்ணீர் ஒன்று, மனித இனமும் ஒன்று அதை உணர்த்தவே செவ்வாடை" என்றாள் அன்னை. கறுப்பு உடையில் சூரிய ஒளி நுழையாததுபோல செவ்வாடையினூடாக பில்லி சூனியம், ஏவல் மந்திர தந்திரங்கள், தீய சக்திகள் நுழையாது. செவ்வாடை அணிந்து தியானம் செய். ஈர்ப்பு தன்மையுடன் தெய்வ அருளும் கிட்டும்.

செவ்வாடை அணிந்து தொண்டு செய். அதன்மூலம் ஆதிபராசக்தியின் அருள் உனக்குக் கிட்டும் என தொண்டின் மகிமையை எமக்கு உணர்த்தியவர் அடிகளார். மருவூர் தொண்டின் மூலம் ஆதிபராசக்தியின் அருள் பூரணமாக எமக்குக் கிடைகிறது. ஊழ்வினைகள் கழிக்கப்படுகின்றன. செவ்வாடை அணிந்து எங்கு நாம் எந்த தொண்டு செய்தாலும், பலன் கிடைக்கின்றது. அதுதான் மருவூர் ஆன்மிகத்தின் தனிச் சிறப்பு.

அதுமட்டுமல்ல இன்னும் ஒரு விசேட சிறப்பு மருவூர் ஆன்மிகத்துக்கு உண்டு. அடிகளார் இல்லறத் துறவியாக இருப்பதுதான் அது. "இந்த ஆன்மிக இயக்கத்தில் கணவன் மனைவியாக இருவரும் ஈடுபடுவதே மிகச் சிறப்பு" என்றாள் அருள்வாக்கில் அன்னை. சக்தியும் சிவனும் சேர்ந்து இயங்க வேண்டும். அதற்குச் சான்று அடிகளார்தான். ஒரு குடும்பத்தில் ஒருவர் உழைத்து மற்றவர் எல்லோரும் சாப்பிட்டால் என்னவாகும்? வருமானம் போதாமல் கடன்படவேண்டி வரும். குடும்பத்திலுள்ளோர் அனைவரும் உழைத்தால் கஷ்டம் இல்லை. அதுபோல குடும்பத்தில் ஒருவர் ஆன்மிகத்தில் இருந்தால் போதாது. அனைவரும் ஈடுபடவேண்டும். அப்பொழுதுதான் உழைப்பிற்கான பலன் கிட்டும். அடிகளாரின் குடும்பமே இதற்கு உதாரணமாக திகழ்கிறது.

கடமை உணர்வு மிக்கவர் எங்கள் அடிகளார். ஆசிரியப் பணி செய்யும்போதே ஆன்மிகம், சமுதாயப் பணிகள் என்று ஓயாமல் உழைப்பவர். அன்னதானம் செய், தர்மப்பணிகள் செய் என்று தன் பக்தர்களை சொல்லிச் சொல்லி ஊக்குவிப்பவர் எங்கள் அடிகளார். இது ஏன்? எந்தச் சில ஆன்மாக்களுக்கு இவன் துன்பம் செய்தானோ இவனால் பாதிக்கபட்ட அந்த ஆன்மாக்களையே இவனிடம் கொண்டு

வந்து சேர்ப்பதற்காகத்தான். ஆயிரம்பேருக்கு இவன் சோறு போட்டால் அந்த ஆயிரம் பேரில் இவனால் பாதிக்கப்பட்ட ஆன்மாக்களும் பயன் அடைகின்றன. அந்தப் புண்ணியமாவது அவனுக்கு கிடைக்கட்டுமே என்றுதான் எங்கெங்கு அன்னதானம் தேவைப்படுகிறதோ, முடிந்தளவு செய் என வற்புறுத்துகிறாள் அன்னை. இது யாருக்காக. எம்வினை தீரத்தானே. சித்தர்களுக்கும் ஆதிபராசக்திக்கும் மிகவும் உவப்பானது அன்னதானம். அதனால்தான் மருவூர் சித்தர்பீடத்தில் அன்னதானத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அன்னதானத்தின் பெருமைகளை எமக்கு உணர்த்தியவர் எங்கள் அடிகளார்தான்.

அருள்திரு அடிகளார் அவர்களின் அறப்பணிகளில் முதல் பணியாக இருப்பது கல்விப் பணியாகும். தான் ஆசிரியராக இருந்ததாலும், கிராமத்தில் தான் படிக்காத உயர்கல்வியை கிராமத்து மாணவர்கள் படிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்காத்தாலும் கல்விப் பணிக்கு அடிகளார் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வ்ருகிறார்கள்.

தெய்வ வழிபாட்டின் மூலம் மக்களிடம் பண்பாட்டை வளர்ப்பது ஆன்மிகத்தின் ஒரு அம்சமாகும். அந்த வகையில் வருடப்பிறப்பு, ஆடிப்பூரம், நவராத்திரி, தைப்பூசம் சித்திரைப் பௌர்ணமி ஆகிய விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் மக்களிடம் ஆன்மிகத்தை வளர்த்து வருபவர் நம் அம்மா.

எந்த ஆலயத்தில் மகளிரான நாம் கருவறைக்குள் செல்ல முடியும்? கருவறை விக்கிரகத்தை எம்மால் தொடமுடியுமா? யாக குண்டம் அமைக்க தெரியுமா, யாகம் செய்யத் தெரியுமா, கும்பத்தில் நூல் சுற்றத் தெரியுமா, ஆம். மருவூர் ஆலயத்தில் முடியும். கருவறைக்குள் செல்லவும். அன்னைக்கு அபிஷேகம் செய்யவும். அலங்காரம் செய்யவும். யாக குண்டம் அமைக்கவும். யாகம் செய்யவும் சக்கரம் போடவும் கலச நூல் சுற்றவும் என்று எல்லா வேலைகளிலும் பெண்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்து ஆன்மிகத்தில் ஒரு புதுமையைப் புகுத்தியவர் அருள்திரு அடிகளார். இப்படி ஒரு குரு எமக்கு கிடைக்க நாம் சென்ற பிறவிகளில் எத்தனை புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இந்த நூற்றாண்டில் அம்மா காலத்தில் இதுபோன்ற புரட்சியை எந்த ஆன்மிகவாதியும் செய்ததில்லை. கும்பாபிடேகங்களையும் மகளிரைக் கொண்டே செய்து வருகிறார்கள். காது குத்தும் நிகழ்ச்சி, வளைகாப்பு,

மங்சள் நீராட்டு, திருமணம் என்று எல்லா சுபகாரியங்களையும் மகளிரே செய்கின்றனர். ஏன்? இறுதிச் சடங்கும் செய்யவும் அவர்களுக்குத் தெரியும். இத்தனையும் கற்றுத் தந்தது யார்? அம்மாதானே!

சமுதாயப் பணிகள் செய்யவும் அதை தானே செய்து தன் பக்தர்களுக்கு பழக்கி விட்டவரும் அம்மாதான். ஒவ்வொரு விழா மேடையிலும் மேடைப் பேச்சுடன் நின்றுவிடாது சமுதாயப் பணிசெய்யவேண்டும் என்று கூறி இன்றுவரை அதை செய்து வருபவர் எங்கள் அம்மா. மேடைப் பேச்சினால் மட்டும் மக்கள் மனதை திருப்திப்பட வைக்க முடியுமா? சமுதாயத்தில் வசதி இல்லாதவர்க்கு ஏதாவது ஒருவகையில் உதவி செய்தே ஆகவேண்டும் என்ற எண்ணத்தில் சமுதாயப் பணிகள் நடத்தப்படுகின்றன. இலவசத் திருமணங்கள் சீர்வரிசையோடு நடத்தப்படுகின்றன. தன் பிள்ளைகள் நடத்த முடியாத அறுபதாம் ஆண்டு திரும்ண விழாவை அம்மாவே பிள்ளையாக இருந்து நடத்திக் கொடுக்கிறார்கள். தையல் இயந்திரம், மிதி வண்டி, சிறு சிறு தொழில் உபகரணங்கள், காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவி, செயற்கைக் கால்கள், முச்சக்கர வண்டிகள், தொழில் செய்பவர்களுக்குத் தேவையான முதலீடுகள் என பலவகையான உதவிகள் செய்யப்படுகின்றன. சித்தர் பீடத்தில் மட்டுமல்ல, அனைத்து மன்றங்களிலும் செய்யப்படுகின்றன. இதனால் பலர் பயனடைந்து வருகின்றனர். இதற்கு மூல காரணம் எங்கள் அம்மாதான். அடிமட்டத்து மக்களுக்கு இதனை விளக்கி முடிந்தவரை அவர்களையும் இதில் ஈடுபட வைத்து, அவர்களது வினைகளையும் தீர்க்கும் இத்தகைய செயல்களை எமக்கு அறியத் தருபவர் யார்?

பெண்களை ஆன்மிகத்தில் ஈடுபடுத்தி, எத்தனை எத்தனை விடயங்களைக் கற்றுத் தந்திருக்கிறார்கள். எந்த ஆலயத்தில் நாம் கருவறைக்குள் செல்ல முடியும். கருவறை விக்கிரகத்தை எம்மால் தொடமுடியுமா? யாக குண்டம் அமைக்க தெரியுமா, யாகம் செய்யத் தெரியுமா, கும்பத்தில் நூல் சுற்றத் தெரியுமா, ஆம். மருவூர் ஆலயத்தில் முடியும். கருவறை செல்லலாம். அன்னைக்கு அபிஷேகம் செய்யலாம். அலங்காரம் செய்யலாம். யாக குண்டம் அமைக்கலாம். யாகம் செய்யலாம். அம்மா எல்லாமே கற்றுத் தந்திருக்கிறார்கள். இப்படி ஒரு குரு எமக்கு கிடைக்க நாம் சென்ற பிறவிகளில் எத்தனை புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

## யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பழையபாடசாலை பரிசளிப்பு தினவிழா சிறப்பு விருந்தினராக சமூகமளித்த திருமதி விமலா மணிவாசகன் அவர்களை வரவேற்று ஆற்றிய சிறப்புரைகளும் கொழும்பு பழைய மாணவர் சங்க கௌரவிப்பு உரைகளும்

## யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை முன்னாள் அதிபரின் உரை

இப்பாடசாலையின் நலன்விரும்பியும், 2004.11.20 இல் பரிசளிப்பு தினவிழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி. விமலா மணிவாசகன் அவர்கள் யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிவநெறி மரபில் தோன்றி தவமும், தியானமும், அன்பும், பண்பும், அகத்திடை மிளிரும் செந்நெறி வாழ்க்கையை மேற்கொண்ட வயித்தியலிங்கம் - அன்னபூரணி தம்பதியினரின் நான்காவது மகளாகப் பிறந்தார். இவருடைய தந்தையார் அம்பலவாணர் வயித்தியலிங்கம் அவர்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெற்றவராவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) உயர்கல்வியை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் மேற்கொண்டு வரும் போது திருமணவாழ்வில் இணைந்தார். பொறியியலாளராகக் கடமையாற்றிய திரு. கந்தையா மணிவாசகனைக் கரம்பற்றி இல்லற வாழ்வை இனிதே வாழ்ந்து, எட்டு வருடங்களின் பின்பு 1981.11.07 இல் வாசுகி என்னும் பெண் மகவைப் பெற்று, சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும்போது அவரது வாழ்வில் எதிர்பாராத விதமாகத் தொடர்ந்து சோக சம்பவங்கள் இடம் பெற்றன. இதனை ஜீரணிக்க முடியாத நிலையில் இருந்த இவர் தனது

பெற்றோருடனும், சகோதரருடனும் வாழ்ந்து வந்தார். தரம் 3இல் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது 1990.03.08 இல் இறைவனடி சேர்ந்த மகள் வாசுகி மணிவாசகனின் இழப்பு இவருக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்று. இருந்தும் அன்று தொடக்கம் இன்றுவரை தனது மகள் வாசுகியின் பெயரால், வருடந்தோறும், தனது மகளை நினைவுகூர்ந்து, இப்பாடசாலை மாணவர்களின் வாசிப்புத்திறனை விருத்தி செய்யும் நோக்கில் ஆரம்பப்பாடசாலை மாணவருக்கேற்ற, தமிழ், ஆங்கில நூல்கள் சஞ்சிகைகள் வழங்கிக் கொண்டிருந்தார். இவருடன் இணைந்து இவரின் தாயார் அன்னபூரணி அம்மையார் அவர்கள், தனது பேத்தியின் ஞாபகார்த்தமாகத் தமது கைவண்ணத்தில் தாமாக தரம் 1,2,3 வகுப்பு மாணவருக்கு ஏற்ற தமிழ், ஆங்கில எழுத்துக்களை, இனங்காணும் கற்றல் உபகரணங்களைத் தயாரித்து வழங்கியுள்ளார்.

இவர் எமது பெற்றோர் மாத்திரமல்ல, நலன்விரும்பியாகவும் இருந்து இப்பாடசாலையின் நல்ல செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு, மிகவும் பற்றுறுதியுன் செயற்பட்டு வருகின்றார். யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு, உபபொருளாளராகவும் கடமையாற்றுகின்றார். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு, உதவியுடன்இப்பாடசாலைமாணவர்களைஇன்றையஉலகமயமாக்கலுக்கு இயைவுபடச் செய்ய வேண்டுமென்ற நோக்கில், தகவல் தொழில்நுட்ப சாதனங்களை வழங்கியுள்ளார். வெள்ளிவிழா மலர்க்குழுவிலும் அங்கத்தவராக இருந்து செயற்படுகிறார். இத்தகைய பற்றும். பண்பும் மிக்க திருமதி விமலா மணிவாசகன் அவர்கள் எமது பாடசாலைச் சமூகத்திற்கு, ஓர் எடுத்துக்காட்டான, முன்மாதிரியான பெண்மணியாகத் திகழ்கின்றார். பாடசாலையின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றும் தொண்டு மகத்தானது. இவருடைய செயற்பாடுகள் இப்பாடசாலை வரலாற்றில் இடம் பெற வேண்டியது அவசியமாகும். இன்றைய நிகழ்வின் சிறப்பு விருந்தினராகத் தங்களைக் கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

**திருமதி த. அ. துரைசிங்கம்**
முன்னாள் அதிபர்
யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

# சிறப்பு விருந்தினர் விமலா மணிவாசகனின் உரை (பரிசளிப்பு விழா 2004)

பிரதம விருந்தினர் உயர்திரு. குமாரசாமி சோமசுந்தரம் ஐயா அவர்களே, சிறப்பு விருந்தினர் உயர்திரு. நாகலிங்கம் வரதராஜா ஐயா அவர்களே, அதிபர் திருமதி. தனரஞ்சினி துரைசிங்கம் அவர்களே, எமது தாய்ப் பாடசாலையின் அதிபர் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அவர்களே, ஆசிரிய பெருந்தகைகளே, மாணவ முத்துக்களே, பெருமை மிக்க பெற்றோர்களே, அன்புச் சகோதர சகோதரிகளே உங்கள் எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.

இன்றைய நிகழ்வில் சிறப்பு விருந்தினரில் ஒருவராக என்னை அழைத்தமைக்கு முதலில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எனது அருமை மகளை யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்குச் சேர்ப்பதற்கு எனது முதல் ஆசானான என் தந்தையுடன் வருகை தந்தபோது, அதிபர் அறை வாசலில் நின்ற போது, எனது மனத்தில் உதித்த நினைவலைகள் பல வருடங்கள் பின்னோக்கிச் சென்றன. அந்த அறை வாசல், நான் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நாலாம் வகுப்பில் படித்த வகுப்பறை வாசலாகும்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியுடன் இணைந்திருந்த இப் பாடசாலை யானது நிர்வாக வசதிக்காக யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையாக பிரிக்கப்பட்டிருந்தது. சேய் பாடசாலையான இப்பாடசாலை நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்பட்டாலும் பௌதிக ரீதியாகத் தாய்ப் பாடசாலையுடன் இணைந்தே இருந்தது.

இராஜவரோதயா விநாயகர் கோவில், அதன் அருகில் இருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் சேய்ப் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. விளையாட்டு மைதானம், விழாக்கள் நடத்துவதற்கு மண்டபம், சிற்றூ ண்டிசாலை என்பன தாய்ப் பாடசாலையுடன் சேர்ந்தே இருந்தது. இந்தக் காட்சி தாயும் மகளும் கைகோர்த்து நடந்து செல்வது போலிருந்தது. எனது மகளும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கப் போகிறார் என்ற எண்ணம் மிகவும் பெருமிதமாக இருந்தது.

துரதிஷ்டவசமாக இந்தப் பெருமிதம் பல வருடங்கள் நீடிக்கவில்லை. எனது ஆருயிர் மகள் என்னை விட்டு இறைவனடியை நாடிப் போய்விட்டார்.

எனது மகள் வாசுகியை நான் இங்கிருக்கும் ஒவ்வொரு மாணவ மணிகளிலும் காண்கிறேன். இந்த எண்ணமே என்னை இப்பாடசாலைக்கு அடிக்கடி வரவைத்து. என்னாலான சிறு உதவிகளைச் செய்ய தூண்டுகிறது. இதுவே நான் உங்கள் முன்பு நிற்றக் காரணமாகும்.

உங்கள் எல்லோரினதும் நலனுக்காக நான் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

நன்றி!

- **"உங்கள் மேனிக்கு அழகு தருவது ஆன்மா! அந்த ஆன்மாவுக்கு அழகுதருவது தொண்டு. அந்தத் தொண்டினைப் பக்குவத்தோடு செய்துவரவேண்டும்."**
- **"பாலைக் கடையக் கடைய அதிலிருந்து பல பொருட்கள் வெளிப்படுகின்றன. தயிர், வெண்ணெய், நெய், மோர் என்ற பல பொருள்கள் பாலில் இருந்து வெளிப்படுகின்றன. அதுபோல ஆன்மிகத்தில் உள்ள பல பொருள்களைத் தியானத்தின் மூலமாக நீங்கள் வெளிக்கொணரலாம்."**
- **"பொறுமை பெருக வேண்டும். நின்று, நிதானித்து, கவனித்துச் செயல்பட வேண்டும்."**

*– ஆன்மிககுரு அருன்திரு பங்காரு அடிகளார் அம்மா*

# சங்க செயற்குழு உறுப்பினர் திருமதி தயாநிதி செல்வநாயகத்தின் உரை

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் கொழும்பில் ஒரு சங்கத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தினை, காலஞ்சென்ற எமது ஆசிரியை திருமதி புஷ்பம் சுப்பிரமணியம் கருத்துத் தெரிவித்த பொழுது செல்வி சற்சொரூபவதி நாதனையும் அழைத்து கலந்தாலோசித்து செயற்பட்டோம். அதன் விளைவாக இன்று ஆலவிருட்சம் போல் விரிவடைந்த கொழும்புச் சங்கம் பல ஆணித்தரமான செயல்களைச் சாதித்துள்ளது. திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி சிவகாமி அம்பலவாணர், திருமதி விமலா மணிவாசகன், திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு போன்றோரின் அயராத உழைப்பினால் நாம் இன்றைய தினம் இவ்விழாவினை கொண்டாடுகின்றோம்.

திருமதி விமலா மணிவாசகன் எமது கல்லூரியின் பழைய மாணவியும், எமது சங்கத்தின் தோற்றம் வளர்ச்சி அதன் செயற்பாடுகள் யாவற்றிலும் பெரும் பங்கு ஆற்றி வருகின்றார் என்பது யாவரும் அறிந்ததே. நான் அவருடன் நெருங்கிப் பழகி அவரது இன்ப துன்பங்களில் பங்கு கொண்டுள்ளேன். விமலாவின் வாழ்க்கையை நோக்கும் பொழுது அவருக்கு பல சோதனைகள் ஏற்பட்டன. இருந்தும் அவர் தனது சிந்தனைகளை பயனுள்ளதாக்கி ஆக்கபூர்வமான செயற்பாடுகளை சாதித்துள்ளார். அவர் எமது சங்கத்தின் வளர்ச்சிக்காக அருப்பாடுபட்டுள்ளார்.

அவரின் வாழ்க்கையில் எவ்வளவோ துன்பங்கள் ஏற்பட்டுள்ளன. அவரது அன்புக் கணவர் கந்தையா மணிவாசகன் இலங்கைத்துறைமுக அதிகாரச்சபை பொறியியலாளராக கடமை ஆற்றிக் கொண்டிருந்த வேளை, 1983 யூலை 29ந் திகதி கொழும்பு கிருலப்பனையிலிருந்து பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி முகாமிற்குச் செல்லும் பொழுது அகால மரணமடைந்தார். பாழும் விதி அத்தோடு எங்கள் விமலாவை விட்டு வைக்கவில்லை. அவரது ஒரேயொரு மகள் ஒன்பது வயதுப் பாலகியான வாசுகியை 1990 மார்ச் மாதம் இழந்துவிட்டார். எல்லாத்

துன்பங்களையும் மனதிற்குள் புதைத்துவிட்டு எங்கள் கல்லூரிக்காக பல நற்பணிகளைச் செய்து வருகின்றார்.

எங்களது பழைய மாணவிகள் சங்கத்தின் ஒவ்வொரு வைபவத்திலும் அளப்பரிய சேவைகள் செய்துள்ளார். வருடந்தோறும் வெளிவரும் எங்கள் சஞ்சிகையான “யாழ்நாதம்” ஒவ்வொரு வருடமும் புதுப் பொலிவுடன் வெளிவருவதற்கு அவரும் பாடுபடுகின்றார்.

எங்கள் சங்கத்தின் உறுப்பினரின் தன்னலமற்ற சேவைகளினால் நாம் பயனுள்ள திட்டங்களை அமுல்படுத்தியுள்ளோம். ஒவ்வொரு வருடமும் நமது அங்கத்தவர்களின் செயற்பாடுகளுக் கேற்ப சிறந்த பெண்மணிகளை பாராட்டிக் கௌரவிக்கின்றோம். அதற்கேற்ப இன்று மூன்று சகோதரிகள் மேடையில் அமர்ந்திருருக்கின்றனர். திருமதி விமலா மணிவாசகனைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுவதற்கு நான் அழைக்கப்பட்டேன். மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி!

- **நல்ல விதையாக இருந்தால்தான் அது நல்ல முறையில் முளைத்து, பூப்பூத்து, காய்காய்த்து நல்ல பலனைக் கொடுக்கும். அதுபோல நல்ல குணம், நல்ல பண்பு இருந்தால்தான் நல்ல நிலைமைக்கு வர முடியும்.**

- **உங்கள் மேனிக்கு அழகு தருவது ஆன்மா! அந்த ஆன்மாவுக்கு அழகுதருவது தொண்டு. அந்தத் தொண்டினைப் பக்குவத்தோடு செய்துவரவேண்டும்.**

- **சீரான நம்பிக்கை, பூரண சரணாகதி அடைந்தால் மட்டுமே ஒருவர் ஊழ்வினையை மாற்ற முடியும் ! ஒன்றைப் பிடி! உறுதியாகப் பிடி! என்னையே முழுமையாக நம்பி சரணடைந்தவர்களை நான் உடனிருந்து அவனைக் கேட்காமலேயே காப்பாற்றுவேன்.**

*– ஆன்மிககுரு அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா*

# திருமதி விமலா மணிவாசகனின் ஏற்புரை

பிரதம அதிதி மனிதநேயர் திரு. வி. கயிலாசபிள்ளை ஐயா அவர்களே, பிரதம அதிதியின் பாரியாரும் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் (கொழும்பு) தலைவியுமான 'பார் புகழ் சேவகி' திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை அம்மா அவர்களே, சங்க உறுப்பினர்களே, இங்கு எமது அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்கும் பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர சகோதரிகளே, சிறார்களே உங்கள் எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.

இன்றைய நிகழ்ச்சியில் கௌரவிக்கப்படும் ஒருவராக என்னைத் தெரிந்தெடுத்த சங்க உறுப்பினர்களுக்கு முதலில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது சங்கத்தின் பிரதான நோக்கம் எம்மை எல்லாம் ஆளாக்கிய கல்லூரிக்கு எம்மாலான உதவிகளைச் செய்து கல்லூரி மேலும் மேலும் சிறப்பான சேவைகளை மாணவிகளுக்கு ஆற்றி அவர்களை முன்னேற்ற செய்வதாகும். கடந்த பல வருடங்களாக நாங்கள் இப்பணியை இயன்றளவு செய்து வருகிறோம். நான் இவற்றில் ஈடுபடும்போது எனக்கென்று பலனை எதிர்பார்ப்பதில்லை. ஒரு குழுவாக எல்லோருடனும் சேர்ந்து இயங்குவதே எனது விருப்பமாகும். காணும் பலனுக்கு எல்லோரும் உழைத்துள்ளோம் எனவே இன்றைய கௌரவம் உண்மையில் உங்கள் எல்லோருக்கும் கிடைக்கும் கௌரவம் என்பதே எனது கருத்தாகும்.

எம்முடைய செயற்பாடுகளையும் எமது கருத்துக்களையும் ஏனையோர் அறியச் செய்வதும் ஒரு நற்செயலாகும். இதன்மூலம் இளைய பழைய மாணவிகளின் கவனத்தினை கவர இடமிருக்கிறது. இதற்கென எமது சங்கம் "யாழ் நாதம்" என்ற சஞ்சிகையை வருடமொரு முறை பிரசுரித்து வருவது உங்களுக்குத் தெரியும். ஆரம்பத்தில் இதற்கு எனது மூத்த சகோதரி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் ஆசிரியையாக பல ஆண்டுகள் கடமை ஆற்றினார்கள். கல்வி கேள்விகளிலும்சரி ஏனைய தகைமைகளிலும்சரி அவர்களுக்கும் எனக்கும் மலைக்கும் மடுவுக்கும் போன்ற இடைவெளி உண்டு.

எனினும் அவர்கள் காட்டிய வழியே இதைச் சில காலம் செய்து வந்திருக்கிறேன். கணினிமூலம் தமிழில் அச்சு அடிப்பது ஒருவருக்கு தெரிந்திருந்தால் அது மிகவும் உதவியாக இருக்கும். ஆரம்பத்தில் நான் தமிழில் அச்சடிக்க முயன்ற போது கணினியில் 'எலி' (mouse) பாவிப்பது ஒரு பாரிய சவாலாக இருந்தது. நிஜ எலி ஓடித்திரிவது போல கணினி எலி கையில் சரியாகப் பிடித்து இயக்க முடியாமல் எதிரில் உள்ள திரையில் 'கேர்சரை' ஓடித்திரியச் செய்யும். இது போன்ற பல சவால்களை சமாளித்து கணினி இயக்க எனக்கு கற்றுக் கொடுத்த ஆசானும் அக்காதான். காலக் கிரமத்தில் தமிழில் அச்சு அடிக்க ஓரளவு கற்றுக் கொண்டேன். இது எனக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

அக்கா வெளிநாட்டில் அதிக நாட்கள் வசிக்கத் தொடங்கியபின் எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உதவி வருவது எனது பெரிய மாமனாரான திரு. அம்மையப்பர் ஆவார். மிகவும் பொறுமையும் இரு மொழிகளிலும் திறமையும் கொண்ட அவர் ஆவணங்களைச் சரிபார்த்து நான் கேட்கும்போதெல்லாம் உதவுவார். எங்கள் பக்கத்து வீட்டில் அவர் பல காலம் தன் மகள், மருமகன் ஆகியோருடன் வசித்து வந்தார். அவருக்கு என்னுடைய நன்றியை தெரிவிப்பதில் இத்தருணத்தில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து அண்மையில் எனது தாயாரை இழந்து தவிக்கும் எனக்கு ஒரு தாய்போல் ஆறுதல் தந்து கொண்டிருக்கும் எங்கள் தலைவி 'பார் புகழ் சேவகி' திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அம்மாவை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது அருகில் எனது பெற்றோர் ஸ்தானத்தில் இருப்பது அவரும் அவருடைய கணவருமாகிய மனிதநேயர் திரு. வி. கயிலாசபிள்ளை ஐயா ஆவார்கள். அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிகள்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியும் அதன் சேயான யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையும் மேன்மேலும் வளர்ந்து இந்து சிறுமிகளுக்கு சகல கலைகளையும் புகட்டி மாண்புமிகு பெண்களாக உருவாக்க நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையாரை வேண்டிக்கொண்டு என் ஏற்புரையை முடித்துக்கொள்கிறேன்.

நன்றி!

# யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபரின் உரை

எமது அன்பான அழைப்பை ஏற்று 2019.11.30 இல் பரிசளிப்பு விழா நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்து நிகழ்வினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் தங்களை வருக வருக என்று வரவேற்பதில் உவகையடைகின்றேன். அடியவர்களுக்கு விக்கினங்களை விலக்கி அவர்களுக்கெல்லாம் அருள் நல்கி அவர்களுடைய வாழ்வை வசந்த மாக்கிக் கொண்டிருக்கின்ற நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடலிலே பிறந்து வளர்ந்த தாங்கள் தமது ஆரம்பக் கல்வியின் முதன்நிலையை இந்து தமிழ் கலவன் பாடசாலை என அழைக்கப்பட்ட யாழ் இந்து ஆரம்ப பாடசாலையிலே பெற்றுக் கொண்டீர்கள். பின்னர் எமது உயர் தமிழ் பண்பாட்டின் கலாசார விழுமியங்களுக்கேற்ப தரம் நான்கு முதல் ஐந்து வரை யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையிலும் இடைநிலை கல்வியினை இந்து மகளிர் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டுள்ளீர்கள்.

தங்களுடைய தந்தை உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அதிபர்களில் ஒருவராவார். தங்கள் அன்னை அராலியிலே மகளிர்களுக்கு தொழில் வாய்ப்பையும் பயனுள்ள பொழுதுபோக்கையும் வழங்கக்கூடிய நெசவாலயம் ஒன்றை அமைத்து நடாத்திய பெருமைக்குரிய பெண்மணி ஆவார். இவ்வாறு சமூக நோக்கிலும் சமூகப் பணிகளிலும் சிறந்து விளங்கிய பெற்றோரைப் பெற்றுக்கொண்ட நீங்கள் மிகவும் பாக்கியசாலியாவீர்கள். இத்தகைய பெற்றோர் தங்களுக்கு துறைமுக அதிகார சபையிலே பொறியியலாளராகக் கடமையாற்றிய திரு. மணிவாசகன் அவர்களை வாழ்க்கைத் துணைவராக்கி இன்புற்றனர்.

இவ்வாறு நல்லதொரு குடும்பப் பின்னணியைக் கொண்ட தாங்கள் ஆன்மீகத்துறையிலும் கல்விப் பணியிலும் நாட்டம் கொண்டு எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உங்களால் இயன்ற உதவியை தாராள மனப்பாங்குடன் நல்கினீர்கள். இம்முறை எமது அன்பான அழைப்பை ஏற்று இன்றைய நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வருகை

தந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது மட்டுமன்றி இன்றைய பரிசளிப்பு நிகழ்விலே சாதனையாளர்களுக்குரிய (தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளி, தேசிய மட்ட தமிழ், ஆங்கிலம் தினங்கள்) பொற்பதக்கங்களையும் தங்களுடைய செலவிலே பெற்றுத்தந்து எமது பாடசாலைச் சமூகத்தினரை மகிழ்வித்துள்ளீர்கள். எமது யாழ் மாவட்ட புகழ்பெற்ற பாடசாலைகளிலெல்லாம் பழைய மாணவர்கள் அள்ளிக்கொடுக்கின்ற தாராளமான உதவிகளின் மூலம்தான் அப்பாடசாலை நிகழ்வுகளும் பாடசாலையின் சாதனையாளரும் பயடைகின்றனர். அந்தவகையிலே எமது பாடசாலைக்கு நீங்கள் வழங்கிய உதவி என்றென்றும் பாராட்டப்பட வேண்டியதாகும். தாங்கள் மேலும் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி மகிழ்வுடன் வாழ இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**செல்வி. சாந்தினி மாணிக்கம்**
அதிபர்
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

- **"விஞ்ஞானம் வளர வளர உண்மையும் ஒழுக்கமும் குறைந்து விட்டன. விஞ்ஞானத்தால் ஒரு பங்கு வளர்ச்சி ஏற்பட்டால் மூன்று பங்கு அழிவும் ஏற்படும். இயற்கைச் சூழ்நிலையில் தான் வளர்ச்சி ஏற்படும்."**
- **"இன்றைய மக்களிடம் உதட்டளவுதான் பழக்கமும் உறவும் அமைந்திருக்கின்றன. அதைச்செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று வாயளவில் சொல்வார்கள், செயலளவில் இருக்காது. இத்தகைய நிலையில்தான் மனித உறவுகள் இருக்கின்றன."**
- **"கோபம் வரும்போது குழப்பமும் சேர்ந்து வரும். கோபமும் குழப்பமும் இரண்டும் சேரும்போது ஒருவன் குணமே மாறும்"**

*– ஆன்மிககுரு அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா*

# கதாநாயகியைப் பற்றி . . .

இலங்கையின் வடபுலத்தில் யாழ்ப்பாணத்தின் மேற்திசையில் உள்ள அராலியூர், அங்கு நெற்களனிகளின் மத்தியில் அமைந்த உதரான் பதியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் சிந்தாமணி விநாயகருக்கு வழி வழித் தொண்டுபூண்டு ஒழுகும் பரம்பரையில் உதித்தவர் அம்பலவாணர் என்னும் பெரியார்.

இவர் அராலி மேற்கு விதானையார் சங்கரப்பிள்ளை முத்துக்குமாருவின் மகள் சிவகாமிப்பிள்ளையைத் திருமணம் முடித்தார். தனது மாமா இளைப்பாற இவர் விதானையாராக நியமனம் பெற்றார். அம்பலவாணர் - சிவகாமிப்பிள்ளைக்கும் பொன்னம்பலம், சரவணமுத்து, வயித்தியலிங்கம் என மூன்று நன்மக்கள் உதித்தனர்.

மூன்றாவது புதல்வாரன வயித்தியலிங்கம் யாழ்ப்பாணக் கல்லூரியிலும், கொழும்புப் பல்கலைகழகத்திலும் கல்வி கற்று அகில இலங்கையில் கணிதத்தில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார். இதனால் புகழ்பெற்ற இங்கிலாந்தில் உள்ள கேம்பிறிஜ் பல்கலைகழகத்தில் புலமைப் பரிசு பெற்று கணிதத்தில் விசேட சித்தி பெற்று முதுகலைமாணி பட்டப் படிப்பை முடித்தார்.

மேற்குறிப்பிட்ட விதானையாரான சங்கரப்பிள்ளை முத்துக்குமாருக்கு சிவகாமிப்பிள்ளையைத் தவிர கந்தையா, சங்கரப்பிள்ளை என இரண்டு ஆண் மக்கள் இருந்தனர். சங்கரப்பிள்ளை கல்வியில் சிறந்து விளங்கி வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்றார். இவர் அராலியில் பிறந்து வளர்ந்து உத்தியோகத்தின் காரணமாக நீராவியடியில் வசித்து வந்த செல்லப்பா (சுப்பிரமணியம்) வின் மகளான காரைக்காலம்மையை மணந்தார். இவர்களுக்கு அன்னபூரணி, அம்மையப்பர், சம்பந்தர் என மூன்று புத்திரச் செல்வங்கள் உதித்தனர்.

மேற்குறிப்பிட்ட அம்பலவாணர் வயித்தியலிங்கம் வைத்திய கலாநிதி சங்கரப்பிள்ளையின் புதல்வி அன்னபூரணியைக் கைப்பிடித்தார். இவர்களது இல்லற வாழ்வின் பயனாக சிவகாமி, கோபால் சங்கரப்பிள்ளை, லீலா,

விமலா, அம்பிகா, மோகன் சுப்பிரமணியம் என ஆறு நன் மக்களை இறைவன் அருளால் பெற்றார்கள்.

இவர்களின் நாலாவது பிள்ளையான விமலாவே இக்கதையின் கதாநாயகி ஆவர். இவர் யூன் மாதம் 5ஆம் திகதி 1955ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இணுவில் வைத்தியசாலையில் பிறந்தார். இவர் பிறந்த பின்னரே இவரது தந்தையாருக்கு நிரந்தரமாக உரும்பிராய் இந்துக் கல்லூரின் அதிபர் பதவி கிடைத்தது. இதற்கு முன்னல் இவரது தந்தையார் தற்காலியமக யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அந்தக் காலத்தில் கூட்டுக் குடும்பமாகவே இவரது (விமலா) பெற்றோர்கள், தாய் வழி மூதாதையர், சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவரது மச்சாள் சந்திரா இவரைவிட மூன்று மாதம் இளையவர். இவரது தாய்மாமனாரின் பாரியரான சிதம்பரவல்லி தனது மகள் சந்திராவுக்காக பால் காய்ச்சி எடுத்து வந்தால் இவர் வேகமாக தவழ்ந்து வந்து மாமியாரின் மடியில் படுத்து விடுவார். இவர் சந்திராவைவிட மெலிதாக இருந்தது இவருக்குச் சாதகமாக அமைந்தது. வேறு வழியில்லாமல் இவரது மாமியார் இவருக்கு தான் கொண்டு வந்த பாலைக் கொடுப்பார். இவரது தாயார் தான் கொன்டு வந்த பாலை சந்திராவுக்கு கொடுப்பார். இது வழமையாக நடக்கும் சம்பவமாகும்.

இவரது பேத்தியார் காரைக்காலம்மையின் மச்சாளான கிழவிப் பெத்தாச்சி என இவரால் செல்லமாக அழைக்கப்படும் செல்லம்மா, இவரது தாயாருக்கு பலவகைகளிலும் உதவி புரிபவர். இவரது பூட்டனார் செல்லப்பாவின் மரண வீட்டுத் துடக்கு கழிவிற்கு உடுப்புக்களைத் தோய்த்துக் காயபோட்டு விட்டு கிழவிப் பெத்தாச்சி அவற்றைத் தொடக்கூடாது என்று கண்டிப்பாகச் சொன்னார். சொல்வழி கேட்டு நடந்தால் அவர்கள் குழந்தைகள் அல்ல. இவரும், இவரது சகோதரியான லீலாவும், மச்சாள் சந்திராவும் மச்சான் சிவகுமாரும் வேண்டுமென்றே அவற்றைத் தொடப் போகிறோம் என பாசாங்கு செய்து கிழவிப் பெத்தாச்சிக்கு கோபமூட்டுவார்கள். கிழவிப் பெத்தாச்சி தடியெடுத்துக் கொண்டு இவர்கள் நால்வரையும் அடிக்க வர இவர்கள் ஒட்டம் எடுப்பார்கள். பின்னர் திரும்ப வந்து கிழவிப் பெத்தாச்சியை பல முறை சீண்டுவார்கள்.

ஒரு முறை இவர்கள் நால்வரும் தனியாக வீட்டிலிருக்கும் போது மாநகரசபை உத்தியோகத்தவர்கள் தென்னை மர ஓலையை வெட்டினார்கள். ஏனெனில் அவை தெருவோர மின்சாரக் கம்பிகளில் முட்டிக் கொண்டிருந்தன. இச்சத்தத்தைக் கேட்டு இவர்கள் நால்வரும் வெளியில் வந்து “யார் நீங்கள்” எனக் கேட்டனர். அவர்களும் விளையாட்டாக “நாங்கள் கள்ளன்கள்” என்றனர். உடனே இவர் “நான் யாரென்று தெரியுமோ? நான் வந்தால் என்ன செய்வேனென்று தெரியுமா? இறங்கடா கீழே” என அவர்களுக்குக் கூறினார். மற்ற மூவரில் ஒருவர் பின் வழியாக அடுத்த வீட்டிற்குச் சென்று சேனாதிராஜா என அழைக்கப்படும் இவரின் மாமாவிடம் விடயத்தைக் கூறி கையுடன் கூட்டி வந்தார். சேனாதிராஜா மாநகர உத்தியோகத்தர்களைக் கேட்ட போது அவர்கள் விடயத்தைக் கூறி தாங்கள் விளையாட்டாகப் பிள்ளைகளிடம் கூறியதாகச் சொன்னார்கள். சேனாதிராஜாவும் “பிள்ளைகளுடன் இப்படியோ விளையாடுவது” எனக் கூறிவிட்டுச் சென்றார்.

லீலாவும், சந்திராவும், இவரும் Milk Toffee செய்யும் போது அதனை அடிப்பிடிக்க விட்டார்கள். அது கோப்பி நிறமாக மாறி வாயில் வைக்க முடியாதபடி கசப்பாக இருந்தது. இவர்கள் மூவரும் பெரியோர்கள் திட்டுவார்கள் எனப்பயந்து பாதியைக் குப்பைக் கிடங்கிலும் மறு பாதியை மலசல கூடத்தில் போட்டு flush பண்ணினார்கள். பாத்திரத்தை நனைத்து ஒரு மூலையில் ஒழித்து வைத்தார்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை தமிழ் கலவன் பாடசாலையிலும், யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையிலும், பின்னர் உயர்தர கல்வியை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் பயின்றார்.

க.பொ.த சாதாரணப் பரீட்சையை முடித்துவிட்டு தையல், வீட்டு விஞ்ஞானம் என்பனவற்றுடன் தாயார் நிர்வாகம் செய்த லக்சீவா என்ற நெசவாலையில் சிலகாலம் பணிபுரிந்து குடும்ப வாழ்க்கைக்குத் தன்னைத் தாயார் படுத்தினார்.

இவர் மறவன்புலவைச் சேர்ந்த விதானையார் கந்தையா - தங்கரத்தினத்தின் மகன் பொறியியலாளர் மணிவாசகனை தனது பத்தொன்பாதவாது வயதில் கைப்பிடித்தார். தமது புகுந்த வீட்டைத் தன்

வீடாகக் கருதி பலவழிகளிலும் தனது கணவரின் குடும்பத்திற்கு உதவி புரிந்தார்.

மணிவாசகனின் சகோதரன் மனோகரனின் மனைவி ஞானாம்பிகை நோய்வாய்ப்பட்டிருந்தமையால் அவர்களின் மூத்த இரண்டு பிள்ளைகள் லவன், மைதிலியை மாறி மாறி வைத்து தங்கள் பிள்ளைகள் போல் வளர்த்தார்கள். ஞானம்பிகை இறைவனடி சேர்ந்த பின் இருவரையும் தங்களுடன் வைத்து வளர்த்தார்கள்.

இவர்களுக்கு ஏழு வருடங்களாக குழந்தைப் பாக்கியமில்லாததால் நாகபூசனி அம்மனை வேண்டி நயினாதீவில் நாகசாந்தி செய்து, எட்டாவது வருடம் வாசுகி என்னும் பெண் குழந்தையைப் பெற்று மகிழ்ந்தார்கள்.

1983ஆம் வருடம் நாட்டின் நடைபெற்ற வன்செயல் காரணமாக ஜூலை மாதம் 29ஆம் திகதி இவரின் கணவர் மணிவாசகன் தமது 36வது வயதில் இறைவனடி சேர்ந்தார். இதன் பின்னர் இவர் தனது பெற்றோர்களே தஞ்சமென யாழ்ப்பாணம் வந்து அவர்களுடன் தங்கினார்.

தமது மகள் வாசுகியையும் தான் கற்ற யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் சேர்த்து கல்வி புகட்டினார். துரதிஷ்டவசமாக இவரின் தந்தை 1988ஆம் ஆண்டு சிவபதம் அடைந்தார். அதனைத் தொடர்ந்து 1990ஆம் ஆண்டு இவரின் மகள் வாசுகியும் மூளைக் காய்ச்சலினால் நாகபூசணியின் நல்லடி சேர்ந்தார்.

அதன் பிற்பாடு இவரை, இவரின் மூத்த சகோதரி சிவகாமியும் அவரின் கணவர் அம்பலவாணரும் கொழும்பில் தங்களுடன் வைத்திருந்தார்கள். இக்காலகட்டத்தில் கணணி பயின்று, யாழ். இந்து மகளிர் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் வெளியிடும் 'யாழ் நாதம்' சஞ்சிகைகளை வடிவமைத்து பெரிதும் உதவினார்.

தனது மகளின் நினைவாக யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் சுத்தம், சுகாதாரம், ஒழுக்கம் என்பவற்றில் சிறந்து

விளங்கும் மூன்று மாணவர்களுக்கும் பரிசளித்தார். அத்தோடு ஒவ்வொரு வருடப் பரிசளிப்பு விழாவுக்கும் தமது பங்களிப்பைச் செய்து வருகிறார். அத்தோடு நில்லாமல் ஒரு கணணியும், நூலகத்திற்குத் தேவையான மாணவர்களின் தமிழ், ஆங்கில வாசிப்புத் திறனை மேம்படுத்த பல நூல்களையும், நாற்பது விரிவுரை மண்டபக் கதிரைகளையும் அன்பளிப்பாக வழங்கினார்.

இவர் தமது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல் தமது கணவரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை. யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும், கொழும்பு பழைய மாணவர் சங்கத்திற்கும் இன்று வரை உறுதுணையாக இருந்து வருகிறார். இவர் நலமாக நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

**பாசமுள்ள அன்பர்கள்**

- **“நாணயம் என்பது செய்கின்ற உலோகத்திலோ, அச்சடிக்கின்ற காகிதத்திலோ மட்டும் இல்லை. சொல்கின்ற சொல்லில் தான் உள்ளது.”**

- **“மனக்கட்டுப்பாடுடன் இருக்கும்போது கடமை உணர்வு ஏற்படும். கடமை உணர்வு ஏற்படும்போது தான் பொறுப்பு உண்டாகும்.”**

- **“ஒரே தாய் ! ஒரே குலம்! வெளிநாட்டில் இருப்பவர்களுக்கும், இந்த நாட்டில் இருப்பவர்களுக்கும் ஆன்மா ஒன்றுதான். உணவு, பாசம், பாதை எல்லாம் ஒன்றுதான். ஆன்மிகப் பணிகளை எந்த அளவுக்கு உண்மை உணர்வோடு செய்கிறாயோ அந்த அளவுக்கு உன் ஆன்மாவும் முன்னேற்ற நிலை அடையும்.”**

*– ஆன்மிககுரு அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா*

# உதவிகளின் மறு உருவம்

இலங்கைத் திருநாட்டின் முக்கிய நகரினுள் ஒன்றான கலை கலாச்சாரம் பண்பாடு மிக்கதுமான யாழ்ப்பாண குடாநாட்டின் தென்மேற்குக் கரையோரமாக அமைந்திருக்கும் ஒரு அழகிய கிராமமே அராலி எனும் ஊராகும். இவ்வூரினை பிறப்பிடமாகக் கொண்ட திரு,திருமதி வயித்தியலிங்கம் அவர்களுக்கு மகளாக அவதரித்த விமலா அவர்கள் ஆரம்பக்கல்வியைத் தமிழ் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார்.

சிறு வயதிலிருந்தே தற்துணிவும், நேர்மையும், நல்ல பண்பும் உள்ளவராகவும் விளங்கினார். திரு. மணிவாசகன் என்பவரை திருமணம் முடித்து வாசுகி எனும் அழகிய மகளினை பெற்றெடுத்தார். தன்பெற்றோர் தன்னை எவ்வாறு பண்புமிக்கவராக வளர்த்தெடுத்தார்களோ அதே போல் சிறு வயதிலே தனது மகளினை கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க செயற்பட்டார்.

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் வாசுகி ஆரம்பக்கல்வியை கற்கத் தொடங்கினார். இறைவனின் செயலோ அல்லது விதியின் விளையாட்டோ தெரியவில்லை வாசுகி அவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டு சிறுவயதிலேயே இறைவனடி சேர்ந்தார்.

திருமதி. விமலா மணிவாசகன் அவர்கள் தமது மகள் வாசுகி மணிவாசகன் ஞாபகார்த்தமாக எமது பாடசாலை சிறுவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்யும் நோக்கோடு, சிறுவர்களுக்கேற்ற தமிழ், ஆங்கில நூல்களை வழங்கி வந்துள்ளார். அத்துடன் கணனி ஒன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளார். இதைவிட ரூபா 50,000 தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான நிதியம் ஒன்றில் வைப்பு செய்து அதன் வட்டியில் பரிசளிப்பதற்கும் ஆவண செய்துள்ளார்.

எமது பாடசாலை 2004ஆம் ஆண்டு வெள்ளி விழாவினை அதிபர் திருமதி. தனரஞ்சினி துரைசிங்கம் தலைமையில் அப்பொழுது உள்ள ஆசிரியர் குழாம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து மிகச்

சிறப்பாகக் கொண்டாடினோம். வெள்ளிவிழா பரிசளிப்பின் போது இவரை சிறப்பு விருந்தினராக வரவேற்று இவரது கைகளினால் மாணவர்ச் செல்வங்களுக்குப் பரிசில்களை வழங்கினோம்.

வெள்ளி விழாவினை சிறப்பிக்க யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வளர்ச்சியினை வெளிக்கொணர மலரினை வெளியிட்டோம். அவ்வெள்ளிவிழா மலர்க்குழு உறுப்பினராக விமலா மணிவாசகன் அவர்கள் திறம்பட செயற்பட்டார். எமது பாடசாலையின் வெள்ளிவிழா மலரினை கொழும்பில் உள்ள யூனி ஆட்ஸ் பதிப்பகத்தில் அச்சிட்டு உரிய காலத்தில் வெளியிட நிதி உதவி மற்றும் சரீர உதவி புரிந்தமையினை என்றும் எம்மால் மறக்க முடியாது.

இதைவிட மாணவர்களின் சுத்தம், சுகாதாரம், ஒழுக்கம் என்பவற்றை மாணவ மணிகளிடம் சிறிய வயதிலேயே கொண்டு வருவதற்காக தரம் 01 முதல் தரம் 05 வரை உள்ள சிறந்த 3 மாணவர்களுக்கு, மகளின் ஞாபகமாக தோடும், சான்றிதழும் வழங்க ஆவண செய்தார்.

2004ஆம் ஆண்டு நடை பெற்ற மெய்வல்லுனர் போட்டிக்கும் இவரை அழைத்து, இவர் கைகளினால் மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கினோம்.

இவரும் இவரது சகோதரியான திருமதி. சிவகாமி அம்பலவாணரும் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு, எமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து நிதி பங்களிப்புச் செய்ய அயராது பாடுபட்டனர்.

அதில் குறிப்பிட்டுக் கூறத்தக்கது, உலக சுற்றாடல் தினத்துக்கு கொழும்பு சென்ற மாணவர்களை உபசரித்து, தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தில் வந்த பணப்பரிசு தொகையுடன் மேலதிகமாக பணம் போட்டு யமகா ஓகன் கொள்முதல் செய்து தந்தார்கள். அத்தடன் எமது வேண்டுகோளுக்கு இணங்க மேலிருந்து படம் காட்டும் கருவி ஒன்றையும் வேண்டி தந்தார்கள். இதைவிட ஒரு லட்சம் ரூபாவை தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான நிதியம் ஒன்றில் வைப்பு செய்து அதன் வட்டியில் வறிய மாணவர்களுக்கு உதவி செய்வதற்கு வழிசெய்து தந்தார்கள்.

இவர் யாழ்ப்பாணம் வந்து செல்லும் போது தாய் பாடசாலையான யாழ். இந்து மகளிர் கல்லூரியினையும், சேய் பாடசாலையான யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையினையும் பார்வையிட்டு தேவையான உதவியினை செய்து வருவதில் இவருக்கு நிகர் யாருமில்லை என்றே கூறலாம். இவரது சேவை எமது பாடசாலைக்குத் தொடர்ந்து வழங்க, எல்லாம் வல்ல இறைவனை இவரை நோய் நொடியின்றி வாழ வைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. சுபாங்கினி சுஜிவன்**
பழைய மாணவர்,
பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவி,
முன்னாள் ஆசிரியர்
யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

- **“வைரக் கல்லைவிடக் கண்ணாடிக் கல் பளபளப்பாக இருக்கும். இங்கே உண்மையைவிடப் போலிகளுக்குத்தான் மதிப்பும் மரியாதையும் அதிகம். அவற்றைக் கண்டு மயங்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.”**

- **“மரத்தில் குறைவான அளவில் பழம் கிடைத்தாலும் அது ருசிமிக்கதாக இருக்கும். அதுபோல நீங்கள் உண்மை உணர்வோடும் உள்ளன்போடு செய்யும் தொண்டு சிறிதாக இருந்தாலும் பயன் மிகுதியாக இருக்கும். பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு தொண்டு செய்யக் கூடாது”**

- **“நாம் பிறந்து வளர்ந்து யாருக்கு என்னென்ன நன்மை செய்தோம் என்று அடிக்கடி நினைத்துப் பார்க்கும் பழக்கம் ஒவ்வொருவருக்கும் வர வேண்டும்.”**

*– ஆன்மிககுரு அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா*

# குணமங்கை விமலா மணிவாசகன்

விமலா மணிவாசகன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக உறுப்பினரும், பிரபல தொழிற்சங்கவாதியும், மக்களால் மாஸ்டர் என அன்புடன் அழைக்கப்பட்டவருமான அம்பலவாணர் வயித்தியலிங்கத்தின் புத்திரியாவர்.

திரு. வயித்தியலிங்கம் யாழ்ப்பாணம் அராலியூரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். 1930 களில் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பை ஏற்படுத்தினார். நாற்பதுகளிலும், ஐம்பதுகளின் முற்பகுதியிலும் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைந்து உழைத்தார். ஐம்பதுகளில் யாழ் இந்துக் கல்லூரியில் பதில் ஆசிரியராகவும் பின்னர் உரும்பராய் இந்துக் கல்லூ ரியில் அதிபராகவும் கடமையாற்றினார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட செயலாளராக நீண்ட காலம் பணியாற்றினார்.

திரு. வயித்தியலிங்கம் இலங்கை பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று இங்கிலாந்து கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் கணிதத் துறையில் சிறப்புப்பட்டம் பெற்றவர். தன் கல்வியறிவை புகட்டி அவர் இலங்கையில் ஒரு ஆசிரியராகவும் அரசியல்வாதியாகவும் இருந்து இளம் சந்ததியினருக்கு வழிகாட்டியவர்.

திரு. வயித்தியலிங்கம் 1943இல் தாய்மாமன் மகளான அன்னபூரணியை திருமணம் செய்து கொண்டார். இத் தம்பதியினருக்கு ஆறு நன்மக்கள் பிறந்தனர். அன்னபூரணி சிறந்த குடும்பத் தலைவி. இவர் 15 வருடகாலமாக லக்தீவா நெசவாலையில் முகாமையாளராக செயற்பட்டார். கமத்தொழிலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் பாடசாலையில் சில ஆண்டுகளே கல்வி கற்ற போதிலும் கல்வியறிவு மிக்க சாதுரியமான ஒரு பெண்ணாகத் திகழ்ந்தார். சமீபத்தில்தான் இவர் இயற்கையெய்தினார்.

விமலா மணிவாசகனுக்கு, 3 சகோதரிகள், 2 சகோதரர்கள். அனைவரும் கல்வித் துறையில் தடம்பதித்து பெரும் உத்தியோகத்தில் இருந்தவர்கள். மூத்த சகோதரி சிவகாமி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்று கல்லூரியிலிருந்து முதல் தடவையாக இலங்கை பல்கலைக் கழகத்துள் விஞ்ஞானத் துறை மாணவியாகப் பிரவேசித்தார். இவர் Micro-Biolo பல துறையில் சிறந்து விளங்கினார். இவர்

இரசாயனப் பகுப்பாய்வளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றினார். திட்டமிடல் அமைச்சில் கடமையாற்றிய சிறந்த கல்விமானும், சமூக சேவையாளருமான திரு அம்பலவாணரின் மனைவி. இவர் தற்சமயம் நியூ சீலாந்தில் பணிபுரிகிறார்.

விமலாவின் சகோதரர் கோபால் சங்கரப்பிள்ளை பொறியியலாளராக இங்கிலாந்தில் கடமையாற்றியவர். மற்றுமொரு சகோதரரான மோகன் சுப்பிரமணியம் வர்த்தகத் துறைப் பட்டதாரி. ஆசிரிய ஆலோசகராக பல காலமாக பணிபுரிகின்றார். சகோதரி அம்பிகா பட்டம் பெற்று தகவல் தொழில் நுட்ப முகாமையாளராக புகழ் பெற்றவர். சகோதரி லீலா தவக்குமாரன் சிறந்த குடும்பத் தலைவி.

விமலா மணிவாசகன் 1961ம் ஆண்டு தொடக்கம் 1963ம் ஆண்டு வரை யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்றவர். பின்னர் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தார். இவர் தன் மகள் கல்வி கற்ற யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வளர்ச்சிக்காக ஊக்கமுடன் உழைப்பவர்.

மறவன் புலத்தின் பாரம்பரிய குடும்பத்தை சேர்ந்த மாணிக்கவாசகர் கந்தையாவுக்கும் சிதம்பரம் தங்கரத்தினத்திற்கும் மகனாகப் பிறந்த மணிவாசகனைத் திருமணம் செய்து இனிதே இல்லறம் நடாத்தி வாசுகி என்னும் அரும் புதல்வியையும் பெற்றார். இவரது கணவர் மணிவாசகன் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் பட்டம் பெற்றவர். முதலில் எம்பிலிப்பிட்டிய ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையில் பணியாற்றினார். பின் மீன்பிடித் திணைக்களத்திலும், கொழும்பு துறைமுக அதிகார சபையிலும் சேவையாற்றினார்.

மகிழ்சிகரமாகத் திகழ்ந்த இவரது வாழ்க்கையில் 1983ம் ஆண்டில் பாரிய சூறாவளி வீசியது இனப்படுகொலைகளை செய்த கும்பல் ஒன்று மணிவாசகனைப் படுகொலை செய்தது. இந்தப் பேரிடியில் இருந்து மீள்வதற்கு முயன்ற விமலாவை காலன் மற்றுமொரு சோதனைக்கு உட்படுத்தினான். மூளைக்காய்ச்சல் காரணமாக இவ்வுலகைவிட்டு மகள் வாசுகியும் நீங்கினாள். இரட்டிப்பு அதிர்ச்சியாக இந்த சம்பவங்கள் விமலாவை பெரிதும் பாதித்தன. அழகான தோற்றத்துடனும் புன்முறுவலோடும் பவனிவந்த விமலா கடும்சோகத்தில் ஆழ்ந்தார். ஆனால் சகோதரி சிவகாமியும், கணவர் அம்பலவணரும் அவர் பக்கத்திலிருந்து விமலாவை திடப்படுத்தினார்கள். சோதனைகள் வந்த

போதுதான் விமலாவின் மனோ பலத்தை எல்லோரும் காணக்கூடியதாக இருந்தது. விதியின் கோர விளையாட்டு என்று தன் மனதை ஆற்றிக் கொண்டு தனது அன்றாடப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

பழையமாணவிகள் சங்கப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். துணைச் செயலாளராக, செயலாளராக, துணைப் பொருளாளராக, யாழ்நாத ஆசிரியராக அவர் பெருந் தொண்டாற்றினார். நேர்த்தியாக உடை உடுத்தி அதிகம் பேசாமால் ஒப்படைக்கப்பட்ட காரியங்களை ஒழுங்காக நிறைவேற்றி எல்லோரது பாராட்டையும் பெற்றார். சங்கம் நடத்திய விழாக்களில் முக்கிய பங்கேற்றார். அவர் பங்குபற்றிய நாடகங்களில் சிறப்பாக நடித்துப் பாராட்டுப் பெற்றார். யாழ்நாத விற்பனைக்கு பொறுப்பாக இருந்து நிதி சேகரித்துத் தந்தார்.

தாயார் சுகவீனமுற்ற போதிலும் அவரையும் கவனித்துக் கொண்டு முக்கிய சங்க அலுவல்களில் பங்கேற்றார். பழைய மாணவிகள் சங்கத்தின் வருடாந்த சஞ்சிகை வெளியீட்டில் விமலாவின் பங்கு அளப்பரியது. தட்டெழுத்துப் பயிற்சி என்று எதுவும் பெற்றிராத அவர் கணினியில் எழுத்துக்களை நேர்த்தியாக பதிவு செய்ய கடும் உழைப்பை மேற்கொண்டார். எவ்வித பிழைகளும் இல்லாமல் சஞ்சிகை பொலிவுடன் விளங்க அவர் பல ஆண்டுகள் அதனை வடிவமைத்துத் தந்தார். தாயார் கடும் சுகவீனமுற்ற போது பணிவிடை செய்வதற்காக சங்கப் பணிகளில் இருந்து விலகினார்.

இவரது அமைதியான, ஆக்கபூர்வமான பணிகளை கௌரவிக்கும் முகமாக சங்கம் 2014ம் ஆண்டு மே மாதத்தில் இவரைக் கௌரவித்தது. தொடர்ந்து தானும் புதல்வியும் கல்விகற்ற ஆரம்ப பாடசாலைக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் இவர் நிதி நன்கொடைகளை அவ்வப்போது வழங்கி வருவது குறிப்பிடத் தக்கதாகும். தனக்கென வாழாமல் பிறருக்கு உரியவளாக தன்னை மாற்றிக் கொண்டு ஆன்மீக நெறிமுறைகளைக் கடைப்பிடித்து இன்னும் அழகுத் தோற்றத்துடன் நடமாடும் குணமங்கை விமலா மணிவாசகன் தேகநலத்துடன் தனது சீரிய வாழ்வைத் தொடர வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறோம்.

**செல்வி. சற்சொரூபவதி நாதன்**
உப தலைவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்,
கொழும்பு

# “சேவைத் திலகம் “
# திருமதி விமலா மணிவாசகன் பற்றி யாழ், இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் மனப்பதிவுகள்

அமைதியானவர், அடக்கமானவர், பண்பானவர், எந்நேரமும் சிரித்த முகம் கொண்டவர், சேவை மனப்பாங்கு நிறைந்தவர், அவர்தான் எமது பாடசாலையின் பழைய மாணவி சேவைத் திலகம் திருமதி. விமலா மணிவாசகன் அவர்கள். இவர் சிறுவயதிலேயே மற்றவருக்கு உதவும் மனப்பாங்கும், பணிவும், செய்நன்றி மறவாமையும் கொண்டிருந்தார் என்று கேள்வியுற்றிருக்கிறோம்.

இவரது தந்தையார் திரு. வயித்தியலிங்கம் அவர்கள் யாழ் உரும்பிராய் இந்துக்கல்லூாயில் அதிபராக இருந்தவர். ‘கம்யூனிஸ்ட்’ வயித்தியலிங்கம் என்று யாழ்ப்பாணத்தில் அனைவராலும் அறியப்பட்டவர். இவரது தாயார் தனது சொந்த முயற்சியால் நெசவு நிலையத்தின் முகாமையாளராக உயர்ந்தவர்.

1955இல் நீராவியடியில் பிறந்த இவர் தமிழ் கலவன் பாடசாலையில் தனது ஆரம்ப கல்வியை கற்றார். அதனைத் தொடர்ந்து தனது கல்வியை 4ஆம் வகுப்பில் இருந்து யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவிலே கற்று, பின்பு யாழ். இந்து மகளிர் கல்லூாயில் தரம் 6 லிருந்து கல்வி பயின்றார்.

இந்து மகளிர் கல்லூரியில் தனது கல்வியை முடித்துக் கொண்டு திரு. மணிவாசகன் (பொறியியலாளர், கொழும்புத் துறைமுக அதிகாரசபை) அவர்களுக்கு மனைவியாகி, தனது மகள் வாசுகியை தான் கற்ற பாடசாலையான யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் இணைத்துக் கொண்டார். தற்போது அவரது மகள் வாசுகியின் ஞாபகார்த்தமாக எமது பாடசாலைக்குத் தேவையான உதவிகளை மனமுவந்து வழங்கி வருகின்றார்.

2019இல் தேசியமட்டத்தில் வெற்றி பெற்ற மாணவருக்கான தங்கப்பதக்கங்களை அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2021இல் 40 விரிவுரை மண்டபக் கதிரைகளை (LECTURE HALL CHAIRS) மனமுவந்து அன்பளிப்புச் செய்தமை எமது பாடசாலைக்கு ஒரு வரப்பிசாதமாகும்.

ஆரம்பப் பாடசாலைக்கு மட்டுமல்ல, தான் கற்ற யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும் தன்னால் ஆன உதவிகளை நல்கி வருவதை இந்து மகளிர் கல்விச் சமூகம் நன்கறியும்.

தற்போது கொழும்பில் வசித்துவரும் இவர் 2019, 2020, 2022 இல் எமது பாடசாலைக்கு வந்து நேரில் சந்தித்துத் தனது அன்பையும். அக்கறையையும் தெரிவித்தார். திருமதி. விமலா மணிவாசகன் அவர்கள் தனக்கு விருப்பமான சமூகப்பணி செய்து நலமாக வாழ யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை சார்பில் வாழ்த்தி நிற்பதுடன், கல்லூ ாயில் வீற்றிருக்கும் இராஜவரோதய விநாயகரின் அருளையும் வேண்டி நிற்கிறோம்.

**யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை சமூகம்**

- **"உழைப்பால் தான் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை. அத்துடன் அந்த உழைப்பில் உண்மை உணர்வும் இருக்க வேண்டும்."**

- **"எனக்கு ஏன் இந்த சோதனை? என்று நினைக்கக்கூடாது. மனக் கட்டுப்பாடு தேவை. ஆன்மாவைத் தட்டிக் கேட்க வேண்டும். மனக்கட்டுப்பாட்டுடன் இருந்து ஆன்மாவைத் தட்டிக் கேட்டால் ஆன்மா பதில் சொல்லும்."**

- **"காற்றலை கொண்டு இது எந்த ஓசை என்று தெரிந்து கொள்ளலாம். அதுபோல உன் உள்ளத்து அலையைக் கொண்டு நீ யார் என்று தெரிந்து கொள்ளலாம்."**

*– ஆன்மிககுரு அருன்திரு பங்காரு அடிகளார் அம்மா*

# அன்னையின் அணிகலன்

திருமதி விமலா மணிவாசகன்! விமலா அக்கா, நீராவியடியில் சைவ வேளாள குடும்பத்தில் சிறந்த கல்விமானகிய திருவாளர் அம்பலவாணர் வயித்தியலிங்கம் அவர்களுக்கும், திருமதி அன்னபூரணி வயித்தியலிங்கம் அவர்களுக்கும் மகளாகப் பிறந்தார். தனது கல்வியை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நிறைவு செய்தார். மிக அமைதியான குணமுடைய இவர் பொறியியலாளரான திருவாளர் மணிவாசகனைக் கரம் பற்றி வாசுகி எனும் செல்ல மகளுக்கு அருமை அம்மாவாகினார். தன்னுடைய அருமை மகளும் கல்வியில் சிறக்க யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் இணைத்தார்.

விதிப் பயனால் எதிர்பாராமல் தனது மணாளனையும், அருமை புதல்வி வாசுகியையும் இழக்க நேர்ந்த போதிலும் மனதை இறைவனில் ஒருமைப் படுத்தி தனது சகோதரி திருமதி சிவகாமி அம்பலவாணர் குடும்பத்தின் அரவணைப்புடன் தானும், தன் மகளும் கல்வி பெற்ற பாடசாலைகளின் வளர்ச்சிகளுக்கு இயன்ற உதவிகளைச் செய்ததுடன், கொழும்பு பழைய மாணவிகள் சங்கத்தில் இணைந்து தன்னுடைய அனுசரனையை இன்றளவும் வழங்கி வருகின்றார்.

கல்லூரியின் பொன்விழா ஆண்டான 1993இல் ஸ்தாபிதம் பெற்ற கொழும்பு பழைய மாணவிகள் சங்கத்தில் தொடக்க காலத்திலேயே இணைந்து கொண்ட விமலா அக்கா இன்று வரை கல்லூரியின் வளர்ச்சியை முன்னிட்டு சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் கல்லூ ரிக்கு வருகை தந்ததுடன் தனது பங்களிப்பையும் நல்கி வருகின்றமை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

2002ஆம் ஆண்டு எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் போது கொழும்பு பழைய மாணவிகள் சங்கம் சார்பில் சிறப்பு விருந்தினராக இவரது தமக்கையார் திருமதி சிவகாமி அம்பலவாணர் வருகை தந்த போது இவரும் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்ட பொழுது தனது தமக்கையாருடன் வந்து சங்கம் சார்பில் கல்லூரியின் விஞ்ஞான கூடத்திற்கு அவசியமான பொருட்களைக் கையளிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கினார்.

இதே போன்று 2003ஆம் ஆண்டு கல்லூரியின் மணிவிழாவின் போது பிரதம அதிதியாக வருகை தந்த திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களுடன் கௌரவ விருந்தினராக வருகை தந்து சங்கம் சார்பாக கல்லூரி நூல் நிலையத்திற்கு ஒரு தொகை நூல்களை அன்பளிப்பு செய்வதில் தனது பங்கை செல்வனே ஆற்றினார்.

தனது மகளுடைய இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டிக்குக் கொழும்பு பழைய மாணவிகள் சங்கம் சார்பாக அழைக்கப்பட்ட பொழுது தவறாது வருகை தந்தமை கல்லூ ரியிலான அவரது அக்கறையையும், அழைப்பை ஏற்று மதிக்கும் பண்பையும் எடுத்தியம்புகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எப்பொழுதெல்லாம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றாரோ அப்பொழுதெல்லாம் இரு பாடசாலைகளுக்கும் அவர் வருகை தந்து அவற்றின் தேவைகளை அறிவதில் அதீத ஆர்வம் காட்டினார்.

மேலும் 2004, 2005 காலப் பகுதியில் கொழும்பு பழைய மாணவிகள் சங்க உதவிப் பொருளாளராக இவர் செயற்பட்ட காலங்களில் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தனது 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அப்பொழுது அப்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட பரிசு நிதியத்திற்கும் தன் பங்களிப்பை நல்கினார்.

கணணியில் தட்டச்சு செய்வதில் தேர்ச்சி பெற்ற இவர் 2009இல் வெளியிடப்பட்ட 'யாழ் நாதம் - இதழ் 09' இல் தொகுத்து எழுதிய 'திருக்கோணேஸ்வரர்' எனும் கட்டுரை இவ் ஆலயம் பற்றிய பல தகவல்களை நாம் அறிந்து கொள்ளக் கூடியவகையில் அமைந்திருந்தமை பாராட்டுக்குரிய அம்சமாகும். இதழ்-15 இல் ஆசிரியராகவும் இவர் திறம்பட செயற்பட்டார்.

2010இல் நடைபெற்ற எமது கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகரின் கும்பாபிஷேகத்திற்குக் கொழும்பிலிருந்து வருகை தந்து தெற்பையணிந்து வழிபாடுகளில் கலந்து கொண்டமை இவரின் ஆன்மீக பற்றுதலையும், கல்லூரி விநாயகப் பெருமானில் இவர் கொண்டிருந்த பக்தியையும் நான் கண்டு வியந்த ஒரு விடயமாகும்.

எமது கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கங்கள் அனைத்தும் ஒன்றினைந்து கல்லூரியின் பவளவிழாவை (2018) முன்னிட்டு வகுப்பறை கட்டிடத் தொகுதி ஒன்றை அமைத்தபொழுது அக்கட்டிடத்தின் அடிக்கல் (2015) நாட்டும் வைபவத்தில் இருந்து பால் காய்ச்சி படம் வைத்தல், திறப்புவிழா (2017) போன்ற எல்லா வைபவங்களிலும் பங்குபற்றிய தோடல்லாமல் தனது பங்களிப்புகளையும் நல்கியமை இவரது கல்லூரி மீதான அதீத அக்கறையையும் பற்றுதலையும் வெளிக்காட்டி நிற்கின்றன என்றால் மிகையாகாது என்றே நான் குறிப்பிடுவேன்.

மேலும் இவரும், இவரது குடும்பத்தவரும் கல்லூரியின் அயலில் இருந்து புலம் பெயர்ந்து அந்நிய தேசங்களில் வசித்தாலும், அவர்களின் கல்லூரி மீதான உள்ளார்ந்த பற்றுதல் என்றும் உள்ளது என்பதை நான் அறிவேன். இப்பற்றுதல் இனி வரும் காலங்களிலும் தொடர வேண்டும் என்பதோடு, விமலா அக்கா சுகபலத்துடனும் நீடித்த ஆயுளுடனும் வாழ வேண்டும் என நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகனைப் பிரார்த்திக்கின்றேன்.

**நிர்மலா சோமசுந்தரம்**
பழைய மாணவி, ஓய்வுநிலை ஆசிரியை
யாழ் இந்து மகளிர் கல்லூரி

- **“அளவுக்கு அதிகமாக செல்போனைப் பயன்படுத்தினால் உன் மூளை நரம்புகள் பாதிக்கப்படும்.உன் மூளைதான் வீணாகும்.”**

- **“ஆற்றோரத்தில் வளர்ந்த ஆலமரம், ஆணிவேர் விட்டு உறுதியாக வளர்ந்திருக்குமேயானால் எவ்வளவு பெரிய வெள்ளம் வந்தாலும் உறுதியோடு நிலைத்து நிற்கும். அதுபோல ஆன்மிகத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், உறுதியும் உள்ளவர்கள் நிலைத்து நிற்க முடியும். எந்தத் தீமையும் அவர்களை அசைக்க முடியாது.”**

*– ஆன்மிககுரு அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா*

# என் அன்புத் தங்கை விமலா

நாங்கள் சகோதரர்கள் ஆறுபேர். நான் முதல் பிள்ளை. நானும் எனக்கு அடுத்த தம்பி கோபாலும்தான் சகோதரர்கள் போன்று வளர்ந்தோம். மற்ற நான்குபேரும் வயது வித்தியாசம் காரணமாக எனக்கு பிள்ளைகள் போன்றே வளர்ந்தார்கள். விமலா நான்காவது பிள்ளை. எனக்கும் விமலாவிற்கும் வயது வித்தியாசம் பதினொன்று. என் அம்மாவிற்கு வேலை அதிகம். சமையல்வேலை, மாடு கன்றுகளைப் பார்க்கும் வேலை, தோட்டவேலை, எங்கள் வீட்டில் இருந்து கல்விகற்கும் உறவினர்கள் தெரிந்தவர்கள் பிள்ளைகளைப் பராமரித்தல் என்று வேலைகள் நீண்டுகொண்டே போகும். எனக்கு சிறுவயதிலிருந்தே குழந்தைகள் சிறுபிள்ளைகள் ஆகியோரைக் கவனிப்பது விருப்பம். எனவே எனது கடைசி நான்கு சகோதரர்கள் வளர்ப்பிலும் நான் அம்மாவிற்கு உதவியாக இருந்தேன்.

விமலா சிறுபிள்ளையாக இருக்கும்போது சிறிது குறும்புக்காரியாக இருந்தார். விமலாவிற்கு ஏடுதொடக்க ஐயா விமலாவை தன் மடியில் வைத்து 'அ' என்று சொல்லி அதை அரிசியில் விமலாவைக் கொண்டு எழுதுவிக்க முயன்றார். விமலா முடியாது என்று அடம்பிடித்தார். ஐயா களைத்துப்போய் அந்த வேலையை செய்யும்படி என்னிடம் சொன்னார். என்னுடன் அதிகநேரம் விளையாடி மகிழும் விமலா நான் சொல்லச்சொல்ல அரிசியில் ஐயாவின் மடியில் இருந்தபடியே எழுதினார். எனது தங்கைகள் விமலாவையும் லீலாவையும் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைக்கும் பின் என்னுடன் சேர்த்து யாழ் இந்து மகளிர் கல்லூ ரிக்கும் கூட்டிக்கொண்டுபோய் வருவது எனக்குப் பிடித்த வேலை.

யாழ் இந்து மகளிர் கல்லூரியல் படிக்கும்போதே விமலா சமயம், தமிழ் ஆகியவற்றில் நாட்டம்கொண்டு பல புத்தகங்களை வாசித்து அவற்றில் தன் அறிவை வளர்த்துக் கொண்டார். எங்களுக்கு அவற்றில் சந்தேகம் ஏற்படும்போது அவற்றைத் தீர்த்துவைப்பார். அல்லது அதுபற்றி மேலும் வாசித்து அறிந்து எங்களுக்கு விளக்குவார். நாங்கள் அவருக்குப் 'பாலபண்டிதர்' என்னும் பட்டம் சூட்டியிருந்தோம். தனது உயர்நிலைக் கல்வி முடிந்ததும் பொறியியலாளர் திரு மணிவாசகனைத் திருமணம்

செய்து கொழும்பிற்கு வந்தார். சிறிது காலம் 'விமலா-மணிவாசகன்' தம்பதியினர் எங்களுடன் தங்கியிருந்தார்கள். பின் தனிக்குடித்தனம் சென்றார்கள். என் கணவரும் நானும் வேலைக்குச் செல்வதால் எங்கள் பிள்ளைகளைக் கவனிப்பதில் எங்களுக்கு உதவி வந்தார்கள். சிலகாலம் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்த 'விமலா-மணிவாசகன்' ஜோடி நாகம்மாள் அருளால் வாசுகி என்னும் புத்திரிக்குப் பெற்றோர் ஆகினர்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது விமலாவின் கணவர் மணிவாசகனும் அவருடன் வான் (van) இல் சென்ற உறவினர்கள் மூன்று பேரும் நண்பர்கள் இரண்டு பேரும் காடையர்களால் தாக்கப்பட்டு சிவனடி சேர்ந்தார்கள். அதன்பின் விமலா யாழ்ப்பாணம் சென்று தன் பெற்றோருடன் வசித்தார். சிறிது காலம் செல்ல உறவினர்கள் உதவியுடன் புது வீடு கட்டி மகள் வாசுகியுடன் வசித்து வந்தார். இறையருளால் கிடைத்த வாசுகி படிப்பதில் சூடிகையாகத் திகழ்ந்தார். வாசுகிக்கு எட்டு வயதான போது நாகம்மாள் தான் கொடுத்த மகளைத் திரும்பவும் 'மூளைக் காய்ச்சல்' என்ற பெயரில் பெற்றுக் கொண்டார். ஒரே மகளையும் பறிகொடுத்த விமலா பின் எங்களுடன் கொழும்பிற்கு வந்தார். விமலாவின் மன ஆறுதலுக்காக முன்பள்ளி மாணவர்கள் படிக்கும் பாடசாலையில் ஆசிரியையாக சேர்த்து விட்டோம். அங்கு படிக்கும் மாணவர்களைப் பார்க்கும் போது வாசுகியின் நினைவு வந்து தன்னைக் குழப்புவாதாகச் சொல்லி அந்த வேலையை விட்டுவிட்டார்.

சிறிது காலம் சென்றபின் விமலா தமிழ் தட்டச்சு செய்வதிலும் கணினி அறிவைப் பெறுவதிலும் தனது ஓய்வு நேரத்தைச் செலவழித்தார். இதனால் விமலா புத்தகங்கள் கணினி மூலம் பிரசுரிப்பதில் வல்லமை பெற்றார். யாழ் இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு இன் 'யாழ்நாதம்' இதழாசிரியராகச் சில வருடங்கள் கடமை ஆற்றினார்.

நானும் என் கணவரும் செய்யும் வேலைகளுக்கு நேரடியாகவும், மற்றும் மறைமுகமாகவும் எங்கள் வீட்டு நிர்வாகத்தைச் செய்தும் உதவி வந்தார். நாங்கள் எங்கள் அலுவலக வேலைகளையும் பொதுத் தொண்டுகளையும் திறம்படச் செய்வதற்கு இது அனுகூலமாக இருந்தது.

விமலா தன் மகள் படித்த யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். அந்தப் பாடசாலைக்கு

அதிகப்படியாக தேவைபட்ட சில உபகரணங்களை வாங்கி அன்பளிப்புச் செய்தார். மேலும் மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்காக நவீன வசதிகள் கொண்ட சிமாட் (smart) அறைகள் இரண்டிற்குத் தேவையான 40 நாற்காலிகள் ஒழுங்கு செய்து கொடுத்தார். விமலாவை 2004ஆம் ஆண்டும் 2019ஆம் ஆண்டும் ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக அழைத்துக் கௌரவித்தார்கள்.

எங்கள் அன்னையின் கடைசி நாட்களில் அவருடன் இருந்து அவரின் தேவைகளை, மற்ற ஐந்து சகோதரர்கள் சார்பிலும், விமலா கவனித்து வந்தார். எங்கள் அன்னையின் நினைவு மலரை வடிவமைத்து பிரசுரிப்பதிலும் தன் திறமையை விமலா காட்டியுள்ளார்.

கடவுளில் அதிக பக்தியும் நம்பிக்கையும் வைத்திருக்கும் விமலா தான் சென்று தரிசிக்கும் எல்லாக் கோயில்களுக்கும், வெளிநாட்டுக் கோயில்கள் உட்பட, நன்கொடை வழங்கத் தவறியதே இல்லை. கொள்ளுப்பிட்டி மேல் மருவத்தூர் வார வழிபாட்டு மன்றத்திற்கு பிரத்தியேகமாக தன்னால் இயன்ற பொருள் உதவிகளையும், உடல் உதவிகளையும் செய்து வருகிறார்.

அவர் பணி மென்மேலும் சிறக்க மேல் மருவத்தூர் அம்மன் அருள் பாலிப்பாராக!

அக்கா சரசு

**திருமதி சிவகாமி அம்பலவாணர்**

24-12-2023

- **“ மனிதர்களின் உள்ளத்தின் வேகம் தான் அழிவை ஏற்படுத்துகிறது. அந்த வேகத்தால் தான் மனிதன் தடம் புரள்கிறான். அந்த வேகத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி ஆன்மிகத்திற்கு உண்டு. அந்தச் சக்தி பெருக ஒவ்வொருவரும் சமூகத்தொண்டு செய்ய வேண்டும்.”**

*– ஆன்மிககுரு அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா*

# My Delightful Sister Vimala

This is a note about my sister, Vimala Manivasakan. Our parents had six children and she is the fourth child. Vimala went to the primary school that is the feeder school for Jaffna Hindu Ladies College. Vimala completed her GCE exam but did not proceed to do higher education after leaving school. She is conversant in Tamil language and is knowledgeable about Hindu traditions.

Vimala married Manivasakan, who was an engineer, and they lived both in Colombo and Trincomalee where Manivasakan worked as a Port Engineer. They had a daughter, Vasuki, who was born in 1981. Vimala and Manivasakan had invited their young nephew and niece, Manivasakan's brother's children, to educate them in Colombo.

Unfortunately, Vimala had to face double tragedies within a space of seven years. Manivasakan was killed during the communal riots in Colombo in July 1983. Vimala then moved to Jaffna after the death of her husband with her daughter. Unfortunately, Vasuki succumbed to an illness in 1990. Thereafter, Vimala went to Colombo to stay with her eldest sister, Sivakamy, and her late husband Ambalavanar. They looked after her very well and she is also helped by her youngest brother, Mohan, his wife Nanthini and nephew Thileepan (Leela's son).

Vimala visited my family in the UK for the first time with her daughter in late 80s. We had the pleasure in accompanying her, our mother, sister Leela and two cousins visiting temples in South India in Year 2000. We also went with her to Malaysia to visit our grandmother's relatives who settled there several decades ago and again to Nepal in 2018 to visit temples and the sacred Lumbini site, Lord Buddha's birth place. She has been to North India including Buddha Gaya in Bihar with another relative. She has also travelled, on her own a few times, to visit her husband's relatives in Canada, her eldest sister in New Zealand and her youngest sister Ambiga and other cousins in Australia.

Vimala has been helping others in her own way - the primary school attached to Hindu Ladies' College, the Hindu temple in Kollupitiya near where she lives, the one in Araly South Vaddukkoddai and her husband's relatives who live in Jaffna.

**Gopal Annai**

# தன்னுடைய கை போன்ற தங்கை

எனது தங்கை விமலா மணிவாசகன் அவர்கள் எனக்கு எல்லாவற்றிலும் எப்பொழுதும் உதவியாக இருந்தவர். தையல், சமையல் கலைகளில்சிறந்தவர். புதியனவற்றைகற்கும்ஆர்வமும், விடாமுயற்சியும் உள்ளவர். எனது திருமணத்தின் போது எனக்குத் தேவையான சகல உடுப்புக்களையும் தைத்துத் தந்தவர். வாழைச்சேனையில் புது வீடு கட்டி சென்ற போது வீட்டுக்குத் தேவையான திரைச் சீலைகள் யாவற்றையும் தைத்துத் தந்தவர். எங்கள் திருமணத்தின் போது அவரும், அவருடைய கணவரும் திருகோணமலையில் இருந்தனர்.

நாங்கள் வாழைச்சேனையில் வசிக்கும் போது அடிக்கடி திருகோணமலையில் இருந்து வாழைச்சேனைக்கு வருவார்கள். எங்களையும் திருகோணமலைக்கு வரும்படி அழைப்பார்கள். அவர்கள் அங்கு இருக்கும் தருணத்தில் இங்கு சூறாவளி வந்தது. உடனே மணி அத்தான் வாழைச்சேனைக்கு வந்து எங்களை திருகோணமலைக்கு அழைத்துச் சென்றார்.

“காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது”

என்ற திருக்குறள் தான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஏனென்றால் வாழைச்சேனையில் எதுவுமே இல்லை, எனது மகள் பிருந்தா கைக்குழந்தை. அவளுக்குத் தேவையான பால்மா கூட வாங்க முடியவில்லை. கடைகள் எல்லாம் பூட்டு. எல்லோரும் பாதிக்கப்பட்டு இருந்தனர். அத்தருணத்தில் தான் மணி அத்தான் வாழைச்சேனைக்கு வந்த முதல் மனிதர் ஆவார். எங்களுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

மகள் கொழும்புக்குப் படிக்கச் சென்ற வேளையில் அவர்களும் கொழும்புக்கு வந்து விட்டார்கள். மகள் பாடசாலை செல்லும் போது எல்லோருடனும் செல்வாள். ஆனால் திரும்பி வரும் போது நான்தான் கூட்டி வரவேண்டி இருந்தது. நான் அதிகம் தனியாக வெளியே சென்றது இல்லை ஆதலால் எனக்கு கஷ்டமாக இருந்தது. இதை அறிந்த மணி அத்தான் மகளை கூட்டி வர ஒரு பெண்மணியை ஒழுங்குபடுத்தி விட்டார்.

“தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.”

ஏன்ற குறளுக்கு அமைய இல்லற வாழ்க்கையை எட்டு வருடமே ஆனாலும் அதனை நல்லறமாக்கியவர்.

மகன் திலீபன், அக்கா வீட்டிலிருந்து படிக்கும் போது அவனுக்கு அதிகமாக பிடிக்கும் சிற்றூண்டி வகைகளை அறிந்து அவன் சாப்பிடுவதற்கு என் தங்கைதான் செய்து கொடுப்பார். அவன் அதிக காலம் அங்கு இருந்ததால் அவனுக்கு என்ன பிடிக்கும் என்பதை என் தங்கை சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

எனக்கு சில பல பிரச்சனைகள் வரும்போது என் தங்கைதான் ஆறுதலும், நம்பிக்கையும் தருவார். இப்பொழுதும் அப்படித்தான் இருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த தருணத்தில் எனக்கும், மகளுக்கும் தேவையான எல்லாவற்றையும் ஒழுங்கு பண்ணித் தந்தார்.

எனது மகள் A/L 2 வருட படிப்பை 6 மாதத்தில் கொழும்பில் படிக்கும் போது, வீட்டிற்கு வந்து பாடம் எடுக்கும் ஆசிரியர்களுக்கு சகல விதத்திலும் அவர்களுக்கு தேவையான விருந்தோம்பல்களைச் செய்தார். காலம் சீரான போது யாழ்ப்பாணம் சென்று எங்களுடைய உடமைகளை எடுத்து வந்தார்.

தன்னுடைய பிரச்சனைகள், சோகங்களை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு, மற்றவர்களின் பிரச்சனைகளையும் தன்னுடைய பிரச்சனைகளாக எடுத்து தீர்த்து வைப்பார்.

என்னுடைய காலம் வரை என்றென்னும் என் கையாக நீடூழி காலம் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**த. லீலா**

# உற்றாரை நேசிக்கும் உள்ளம்

எனது சகோதரி விமலா மணிவாசகன் தனது ஆரம்பக் கல்வியை யாழ் ஆரம்ப தமிழ் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் பயின்றார். இதனைத் தொடர்ந்து 1973ம் ஆண்டு பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் பொறியியலாளராகக் கடமையாற்றிய திரு. கந்தையா மணிவாசகனை கரம்பற்றி இல்லற வாழ்க்கையில் இணைந்தார். அவரை நாங்கள் மணி அத்தான் எனச் செல்லமாக அழைப்போம். அவர் மிகவும் நகைச்சுவையானவர். அவர் பொறியியலாளராக திருகோணமலையில் கடமையாற்றிய போது கடற்படை பங்களோவில் தங்கியிருந்தார். பாடசாலை விடுமுறை ஒன்றின் போது அங்கு இருவருடனும் தங்கியிருந்தேன். அங்குள்ள துறைமுகம், கோயில்கள் உட்பட நகரிலுள்ள பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றார்கள். இருவரின் அரவணைப்பினாலும் மிகவும் களிப்புற்றேன்.

இல்லற வாழ்க்கையில் இனிதே வாழ்ந்து எட்டு வருடங்களின் பின்னர் 1981-11-07 இல் வாசுகி என்னும் பெண் மகளைப் பெற்றனர். சீரும் சிறப்புமாக அவர்கள் வாழ்ந்து வரும் போது 1983ம் ஆண்டு யூலை மாதம் ஏற்பட்ட இனக்கலவாரத்தின் போது தனது உறவினர்கள், நண்பர்கள் ஐந்து பேருடன் கணவரைக் காடையர்களின் வெறியாட்டத்திற்கு பறிகொடுத்தார். இச்சோகசம்பவத்தின் பின்னர் கொழும்பில் தங்கியிருந்த அவர் யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றோருடன் வாழ்ந்தார். மகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பெற்றோரின் ஆலோசனைக்கு அமைய மைத்துனர் வி. அம்பலவாணர், சகோதரன் வ. கோபால் சங்கரப்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் நீராவியடியில் வீடு ஒன்று அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டது.

மகள் வாசுகி தனது ஆரம்பக் கல்வியை யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் கற்றார். அவர் தரம் 3இல் கல்வி கற்கும் போது எதிர்பாராது ஏற்பட்ட நோயினால் 1990-03-08 இறைவனடி சேர்ந்தார். தன் கணவரையும், தந்தையையும் ஏற்கனவே இழந்த இவருக்கு மகள் வாசுகியின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாக இருந்தது. இதனால்

மனமாற்றத்திற்காக தனது மூத்த சகோதரி சிவகாமியுடன் கொழும்பில் வாழ்ந்தார். 1996இல் ஆச்சி (அம்மாவின் தயார்) யின் இறப்பைத் தொடர்ந்து அம்மாவும் கொழும்புக்கு வந்து இவர்களுடன் வாழ்ந்தார். பின்னர் தாயாரின் இறப்பைத் தொடர்ந்து ஆன்மீகத்துறையிலும், கல்விப் பணியிலும் நாட்டம் கொண்டார்.

மாணவர்களின் வாசிப்புத்திறனை விருத்தி செய்யும் நோக்கில் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கேற்ற தமிழ், ஆங்கில நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களை தேவையான போது வழங்கினார். மேலும் இப்பாடசாலையின் நலன் விரும்பியாகவும், யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க உபசெயலாளராகவும் கடமையாற்றுகிறார்.

தனது பெறா பிள்ளைகளுக்கு (கணவனின் தம்பியின் பிள்ளைகள்) பொருளாதார ரீதியாக உதவியதுடன், அவர்கள் பிள்ளைகள் கல்வியில் சிறந்த நிலையை அடைவதற்கு உதவினார். நான் தற்போது வசிக்கும் வீட்டை வாங்குவதற்கு பணம் பற்றாக் குறையாக இருந்த போது எவ்விதமான தயங்கமும் இன்றி கைமாற்றாக பண உதவியை வழங்கினார்.

தனது கணவர் மற்றும் மகள் ஆகியோரை இழந்த ஆரம்பத்தில் சோர்வு அடைந்த போதும், தற்போது அதில் இருந்து மீண்டு மன வலிமையுடன் ஆன்மீகத்துறையிலும், கல்விப் பணியிலும் நாட்டம் கொண்டு பணி செய்வதுடன், உறவினர்களுக்கும் அவ்வப்போது ஏற்படும் தேவைகளையும் பூர்த்தி செய்து வருவது போற்றத்தக்கது. அவர் நீண்ட காலம் நோய் நொடி இன்றி வாழ சிந்தாமணிப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றேன்.

செல்லத் தம்பி

**வ. மோகன் சுப்பிரமணியம்**

# My Seeni Amma

My first memory of Seeni Amma is when I was growing up at our house in College Road, Jaffna. Although I was one of a large number of kids growing up there, Seeni Amma took me under her wings and treated me as if I was her own child. I was well looked after and never left want of anything during my early childhood thanks to her love and affection.

After the return of my parents from UK I moved with them to Sri Lankan capital Colombo. In the interim period Seeni Amma married Seeni Iya Manivaskan and initially they lived in Circuit Bungalow in Trincomalee in the East of Sri Lanka. I always looked forward to the school vacation as it gave me the opportunity to visit her and spend time with her there. She always looked after me well, including making my favourite dishes during my stay there.

When Seeni Amma and family eventually moved to Colombo, I remember her looking after her brother in law's children while they came to Colombo to pursue their studies. They were well looked after by her and thrived under her love and care. Around this period, she was also blessed with the arrival of her daughter Vasuki. However, she continued to look after Anu and myself on numerous days after school while our parents were at work. In fact, she was our second mother and always looked after us well.

Tragedy stuck us in most unfortunately way during the communal violence in July 1983 and she lost her husband during the violence. After this period, she moved back to Jaffna with Vasuki to start rebuilding her life with the wider family. During this time both Anu and myself also had to relocate to Jaffna and stayed with the wider family and despite her own personal suffering she continued to ensure that we were looked after well until we both were able to leave Jaffna about 2 years later.

Fate intervened again, with Vasuki sadly passing away unexpectedly to join her father. While this was a major set-back, Seeni Amma soon recovered from this loss and continued to rebuild her life. Her selfless nature was well reflected by the large number of nieces and nephews she continued to directly look after and support. Majority of the children in the next generation of our wider family gained an honorary 'amma' in Seeni Amma.

In addition to this Seeni Amma also found solace in her faith undertaking pilgrimage to visit several holy Hindu Sites both in Sri Lanka and also in India. She also went and spent time in Ashrams to devote more of her time to serving god.

Both Anu and myself will be forever grateful to Seeni Amma for her efforts in supporting Anu in bringing up Gadjan and Lakshmi under most trying circumstances in Christchurch New Zealand over the past 20 years.

**Kumaran A**

# சமூக சேவகி

சிறுவயதில் எனது சீனியம்மாவுடன் வளர்ததனால் என்னிடத்தில் மிக பாசமாக இருப்பார். கள்ளம், கபடம் அற்ற உள்ளம் கொண்டவர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவது அவரால் இயலாது. மனதில் நினைப்பதை உடனே கூறிவிடுவார்.

சமையல் கலையில் வல்லவர். ஆசையாக ஏதாவது தின்பண்டம் வேண்டும் என்றால் உடனே செய்து கொடுப்பார். பரதக்கலையை இரசிப்பதிலும், அதற்குரிய ஆடை, அணிகலன்களைத் தெரிவு செய்வதிலும் மிகுந்த நாட்டம் உள்ளவர்.

கோவிலுக்கு என்னுடன் வருவதில் மிக்க ஆர்வம் உள்ளவர். சமூக சேவைகளிலும், தான் கல்வி கற்ற பாடசாலைத் தேவைகளைப் பூர்திசெய்வதிலும், கோயில் தொண்டுகள் செய்வதிலும் நாட்டம் உள்ளவர்.

சின்னச் சின்ன தையல் வேலைகளில் எனக்கு மிகவும் உதவுவார். என்னைப் போலவே அவர் என் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மிகவும் உதவுவார். நூறாண்டு காலம் நோய்நொடி யில்லாமல் என் சீனியம்மா வாழ எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

**அ. அனுராதா**

# நலன் விரும்பி
# திருமதி விமலா மணிவாசகன்

திருமதி. விமலா மணிவாசகன் எனது தந்தையாரின் மூத்த சகோதரியானகாலஞ்சென்றஅன்னபூரணிவயித்தியலிங்கம்அவர்களின் மூன்றாவது புதவியாவார். இவரது கணவர் ஒரு பொறியியலாளர். அவர் எமது நாட்டில் நிகழ்ந்த ஒரு கலவரத்தின் போது இறைவனடி சேர்ந்து விட்டார். இவர்களின் ஒரேயொரு மகளான செல்வி. வாசுகி அவர்களும் சிறிது காலத்தில் நோய்வாய்பட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்.

இப்படியாக பல இன்னல்களுக்கு முகம் கொடுத்தும் மனம் தளராது சிறப்பாக மற்றவர்களுக்கு வழிகாட்டியாக வாழ்கிறார். தனது உறவினர்களுக்கு தேவையான நேரத்தில் பல உதவிகளை பல்வேறு வழிகளில் செய்து கொண்டிருக்கிறார்.

இவர் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார் தான் கற்ற பாடசாலையை மறவாது அதன் முன்னேற்றத்துக்காக பல உதவிகள் செய்து வருகிறார். அப்பாடசாலையின் மாணவிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் நிதி உதவி வழங்கியும், பாடசாலை நூல்நிலையத்திற்கு புத்தகங்கள் வழங்கியும், மற்றும் பாடசாலைக்கு தேவையான உபகரணங்களை பெற்றுக் கொடுத்தும் உதவுகிறார்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு வெளியீடும் சஞ்சிகையான "யாழ் நாதம்" நூலை அச்சிடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

இவருடைய பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**கௌரி தேவசேனாதிபதி**

# The Sweet Mother – Seeniamma

Seeniamma which translates to “sweet mother” how I call my maternal aunt; not only by name but also she is the sweet mother to me. I lived with her in my mid & upper school time. She played an important role in my upbringing, providing different perspective and unique kind of love. She is someone who is service-minded, kind-hearted, religious, and a volunteer in various social works. She loves to travel.

Seeniamma is a remarkable woman. She has always been service-minded, volunteering for different social causes and giving her time and resources to help those in need. Her kind-heartedness is evident in the way she treats everyone around her with love and respect. Her religious faith is not just a personal belief but a way of life that guides her actions and decisions.Growing up I was fortunate to live with her in the same home at Kolpetty. She took care of me like her own child. She ensured I got all the facilities to enable me to function independently and pursue my education. She ensured all the family members Periyappa, Periyamma, I and her eat the dinner together so that we share stories of the day and kept the warmth of the home.  I have fond memories of our time together from watching movies, gardening and she telling past family history of my maternal side. Though I have agnostic views she makes sure I participate in all religious activities she conducts.

But what makes Seeniamma truly special is her resilience and strength in the face of adversity. She lost her husband and daughter when she was still young, but she didn’t let that break her spirit. Instead, she channeled her pain into helping others, becoming volunteer in various social works. She saw the suffering of others and felt compelled to do something about it. Her selflessness and generosity have touched many lives, and she continues to inspire others to follow in her footsteps. As I grew older and financially independent, Senniamma entrusted me to give her financial advice and other help when she requires. It was a humbling experience, as I saw firsthand how she valued my opinion and trusted me to help her with important decisions. It was also an opportunity for me to give back to someone who had given so much to me. I am grateful for Seeniamma’s presence in my life and hope to emulate her example of love and service to others. I wish her long healthy life with happiness.

**Thileepan Thavakumaran**

# உறுதியான ஊன்றுகோல்

எங்கள் பெரியப்பாவின் மனைவி திருமதி. விமலா மணிவாசகன், அவரது திருமணத்திற்குப் பிறகு எங்கள் குடும்பத்தை தன் குடும்பமாகவே நினைத்து பெரியப்பாவுடன் இணைந்து பல வழிகளிலும் உறுதுணையாக இருந்தார். பெரியப்பா தனது 36வது வயதில் இறைவனடி சேர்ந்த பிறகும் பாசமுள்ள பெரியம்மா எந்தவித மாறுதலும் இல்லாமல் பழைய மாதிரியே நடந்து வருகிறார்.

கலைச்செல்வியின் திருமணம் முடிவாகியபின் செல்வியைத் தன் மகளாகவே நினைத்து சில காலம் கொழும்பில் தன்னுடன் வைத்திருந்து தேவையான ஆபரணங்களை வாங்கித் தந்து, திருமணப் பதிவுக்காண செலவையும் மாப்பிள்ளையுடன் பொறுப் பேற்றார்.

ஆசையப்பாமனோகரன்விபத்திற்குஉள்ளானசெய்தியைஅறிந்ததும் உடனடியாக யாழ்ப்பாணம் வந்து அவரை வைத்தியசாலையில் பார்த்து, அவருக்கு ஆறுதலாக அருகில் இருந்து உயிர் போகும் தருணத்தில், “தானும், எங்கள் குடும்பமும் இருக்கும் வரை அவரது குடும்பத்தையும், கோயிலையும் நன்றாகப் பராமரிப்போம்” என உறுதி கூறி அவரது தவிப்பைத் தணித்து அமைதியான நிம்மதியான இறப்பிற்கு வழி வகுத்தார்.

அவர் அளித்த உறுதி மொழிக்கிணங்க ஆசையப்பாவின் மகள் சோபனாவின் திருமண ஏற்பாடுகளை எங்களுடன் சேர்ந்து செய்து எங்கள் சுமைகளைக் குறைத்தார். அதே போல் எங்கள் பரம்பரைக் கள்ளித்திடற்பதி கல்யாண வேலவர் முருகமூர்த்தி கோயிலைப் புனருத்தாரனம் செய்து கும்பாபிஷேகத்திற்கும் எங்களுடன் இணைந்து சிறப்பாக நடைபெற உதவினார். விசேட தினங்களுக்கு உபயகாரர்களை ஒழுங்கு செய்து, தினமும் ஒரு காலப் பூசையும், அலங்காரத் திருவிழா பத்து நாட்கள் நடைபெறவும் வழிவகுத்தார்.

கயல்விழி, ஜெயரூபியின் திருமணங்களின் போது இரு தடவைகள் கனடாவிற்கு வந்து எங்களுடன் சிலகாலம் தங்கியிருந்ததை எங்களால்

மறக்க முடியாது. எந்தப் பிரச்சனைகள் வந்தாலும் ஊன்று கோலாக அன்பான பெரியம்மா இருக்கிறார் என்பது எங்கள் குடும்பத்திற்கு மிகவும் ஆறுதலான விடயம்.

அருமையான பெரியம்மா நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல கள்ளித்திடற்பதி கல்யாண வேலவர் முருகமூர்த்தியைப் பிரார்த்திக்கிறோம்.

**க. மகேந்திரன் குடும்பம்**

# எங்கள் பாசமுள்ள பெரியம்மாவிற்கு ...

எமது குடும்பத்தின் தலைவியாக வந்து எல்லா விதத்திலும் எமது குடும்பத்திற்கு பக்க துணையாக இருந்து மகிழ்ச்சி என்றும் நிலைத்திட வளமும், நலமும் பெரிகிட உறவுகள் பேரின்பம் தந்து மகிழ்ந்திட வாழும் நாட்கள் வளமாய் அமைந்திட நீங்கள் பல்லாண்டு காலம் நலமாய் வாழ வேண்டும்.

உங்கள் அருகில் இல்லை என்றாலும் உருகி எழுதுகிறேன். உங்களை பார்க்க முடியவில்லை என்றாலும், பாசத்துடனும் எங்கள் குடும்பத்திற்காக, எல்லா விதத்திலும் உதவிய எங்கள் பெரியம்மா, என்றென்றும் நீண்ட ஆயுமுடன் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல முருகப் பெருமானை வணங்குகிறேன்.

பாசமுள்ள
**சி. மனோகரி குடும்பம்**

# என் பெரியம்மா

இந்து சமுத்திரத்தின் முத்தென அழைக்கப்படுவது இலங்கையாகும். அந்த இலங்கை திருநாட்டின் நெற்கோட்டையாக திகழ்வது மறவன்புலோ கிராமமாகும். அந்த கிராமத்தில் விதானையாக வாழ்ந்தவர் எங்கள் அப்பப்பாவாகும். அவர் அந்த ஊரை சேர்ந்த சிதம்பரநாதன் அவர்களின் புதல்வி தங்கரத்தினத்தை திருமணம் புரிந்தார். இவர்களுக்கு முறையே மகேசன், புனிதவதி, மணிவாசகன், மனோகரன், மகேந்திரன், மகாதேவன் ஆகிய நன் மணிகள் பிறந்தார்கள். இவர்களின் சிரேஷ்ட புதல்வன் மகேசன், புதல்வி புனிதவதி, கனிஷ்ட புதல்வன் மகாதேவன் என்பவர்கள் சிறு வயதிலேயே சிவபதம் அடைந்துவிட்டார்கள்.

இவர்களின் மூன்றாவது புதல்வரும், என் அப்பாவின் அன்பு அண்ணருமான மணிவாசகன் அவர்கள் பொறியியலாளர். இவர் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் மேற்கில் இருக்கும் அராலி ஊரைச் சேர்ந்த வயித்தியலிங்கம் - அன்னபூரணி தம்பதிகளின் மூன்றாவது புதல்வி செல்வி. விமலா அவர்களை திருமணம் புரிந்தார். இவரே அன்பிற்கும், பண்பிற்கும் உரிய என் பெரியம்மா ஆவர்கள்.

இவர்கள் தமக்கு என வாழாது, எங்கள் குடும்பத்தின் உயர்வுக்காகவும், நலனிற்காகவும் வாழ்ந்தனர். பெரியப்பா, அவர்கள் தனது அருமைத் தம்பி மனோகரனின் மனைவியும், என் அம்மாவுமான திருமதி ஞானாம்பிகையின் மறைவுக்குப் பின் சிறுவயதில் இருந்தே என்னையும் லவன் அண்ணாவையும் தமது பிள்ளைகள் போல் பெரியம்மாவுடன் இணைந்து வளர்த்து வந்தார். நாட்டில் 1983ஆம் ஆண்டில் யூலை மாதம் இடம் பெற்ற கலவரத்தில் எங்கள் பெரியப்பா (29-07-1983) 36வது வயதில் அகால மரணமானார்.

அதன் பின்னர் எங்களைப் பெரியம்மா அவர்கள் அப்பாவிடம் ஒப்படைந்து விட்டார். அப்போது நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக பெரியம்மாவின் தொடர்பு அற்று இருந்தது. பிறகு நான் கல்யாணம் செய்து இருக்கும் நிலையில் அப்பாவுக்கு தீ விபத்து எற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். இதனை கேள்விபட்ட பெரியம்மா அவர்கள்

உடனடியாக கொழும்பில் இருந்து வந்தார். அவர்கள் வந்த பின் அப்பாவின் நிலைமை பின் அடைந்து வருவதை கண்டு தனது தாயார் இயலாமை நிலையில் இருந்த போதும், எங்கள் நிலைமையினை கண்டு தனது தம்பியை தாயை கவனிக்கும் படி கூறிவிட்டு, எங்களுடனே இருந்தார். அப்பா அவர்கள் 05-01-2012 அன்று இறந்து விட்டார். நாங்கள் தவித்து நின்ற போது எங்கள் எல்லோருக்கும் பெரிய ஆதரவாக இருந்தார். எனது அப்பாவின் இறுதி கடமைகள் சிறப்பாக நடந்து முடிந்த பின்னர் கொழும்புக்குச் சென்றுவிட்டார்.

பின்னர் கொழும்பில் இருந்தபடி தொலைபேசியில் எங்களுடன் கதைத்து ஆறுதல் அளிப்பார். அப்பா விட்டுச் சென்ற பணிகள் பலவற்றை முன்னின்று செய்தார். அப்பொழுது எனக்கு இருப்பதற்கு வீடு இல்லை என்ற கவலை. அந்த நிலையில் அதிஷ்ட வசமாக எனக்கு வீட்டுத் திட்டம் மூலம் வீடு கட்ட சந்தர்ப்பம் அமைந்தது. அதற்கு மும்மரமாக நின்று ஒத்துழைப்பு தந்து, பண உதவி செய்து, எனக்கு ஊக்கம் அளித்ததால், என்னால் வீடு கட்டி முடிக்க முடிந்தது.

அடுத்து என்னுடைய பிள்ளைகளின் படிப்புக்குத் தேவையான உதவிகளை அப்பப்ப செய்தார். அது மட்டுமன்றி நான் ஆசைப் பட்டதக்காக என்னை இந்தியாவிற்குக் கூட்டி சென்று பல இடங்களை காட்டினார். எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாது எனக்கு எல்லாவற்றிலும் உதவி செய்தார். இப்பவும் என்னை கலவைப்பட விடமாட்டார். யார் எது செய்தாலும், சொன்னாலும், பெரியப்பா இல்லாத இடத்தில் எங்களைக் கைவிடாது பார்த்துப் பார்த்து உதவி செய்வார். இப்படிப்பட்ட பெரியம்மாவை என்றும் மறக்கமாட்டேன். எனக்கு அவர் ஒரு பெரிய பொக்கிஷம்.

பெறாமகள்

**ப. மைதிலி**

# My Vimala machaal

I have known my cousin Vimala machaal since I was little, but I actually got to know her better when she married my paternal side uncle, Mani mama and came to live next door in Colombo. I saw them almost every day and became close to both.

Most of the time, Lavan or Mythilli, mama's nephew and niece from Jaffna, would be staying at their place. Vimala machaal would be always busy cooking some nice food for them and we benefited from having those special foods and enjoyed playing with them.

When they moved to Trincomalee for a few years, my brother and I visited them a couple of times. We stayed at their cool Bungalow at the Navy dockyard and sailed with my uncle in a boat to the other side of the Trinco harbour where he worked as an engineer at the Ports Authority. We would spend the whole day riding the tugboats tide up near their house that went out to bring ships into the harbour and had a lot of adventures. When we got home Vimala machaal would have a wonderful meal waiting for us. They took us to the Konesawaram temple and to the beaches very often. One of our best holidays were spent at their house in Trinco and they were wonderful hosts.

When they came back to Colombo, their daughter Vasuki was born and that was special time for all of us. We had such a happy time together until the black July 1983 when it all ended, tragically.

Since then Vimala machaal had lost so much and gone through unimaginable pain and suffering. After losing her husband and then her only daughter, she had the courage and the strong will to not just survive but to do the best she could to be self-sufficient and to help others around her is very remarkable. She is the most positive person I know, and she has become very philosophical in accepting life as it comes and embrace it with a smile. I truly admire the way she adapts to situations and advices me when she visits me in Sydney.

Wishing her the best of health and a peaceful life.

**Nalayini Sanmugarajah**

# என் விமலா மச்சாள்

விமலா மச்சாளை என் சிறு வயது முதலே நான் அறிந்திருந்தாலும், அவர் என் தந்தை வழி மாமாவான மணி மாமாவைத் திருமணம் செய்து கொழும்பில் எங்கள் பக்கத்து வீட்டில் வசிக்கத் தொடங்கிய பின்னரே அவருடன் அதிகம் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அந்த நாட்களில் அவர்களை தினமும் சந்தித்துப் பழகி அவர்கள் இருவருடனும் மிகவும் நெருக்கமானேன்.

அந்தச் சமயத்தில் பல நாட்கள் மாமாவின் தம்பியின் பிள்ளைகளான லவன் அல்லது மைதிலி யாழ்ப்பாணத்திலிருந்து அவர்களுடன் வந்து தங்கியிருப்பார்கள். விமலா மச்சாள் அவர்களுக்காக விசேஷமான சாப்பாடுகள் பலகாரங்கள் என்று எப்போதும் ஏதாவது செய்துகொண்டே இருப்பார். அந்த விசேட உணவுகள் எங்களுக்கும் கிடைக்கும். அவர்கள் இருவருடனும் விளையாடுவது எங்களுக்கு பிடித்த பொழுதுபோக்காக இருந்தது.

சில ஆண்டுகள் மாமாவுக்கு வேலை மாற்றலாகித் திருகோணமலையில் அவர்கள் இருவரும் வசித்தார்கள். அப்போது என் சின்னண்ணாவும் நானும் சில பள்ளி விடுமுறைகளை அவர்களுடன் கழித்திருக்கிறோம். மணி மாமா இலங்கைத் துறைமுகங்கள் அமைச்சில் பொறியியலாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர்களின் அழகான பங்களா கடற்படைத் துறைமுகத்தில் அமைந்திருந்தது. அங்கிருந்து மாமாவுடன் துறைமுகத்தின் மறு கரையிலுள்ள அவரின் அலுவலகத்துக்குப் படகில் செல்வோம். அங்கு கப்பல்களுக்கு வழிகாட்டும் படகுகள் பல நிறுத்தப்பட்டிருக்கும். பகல் முழுவதும், அவை கடலுக்குக் கப்பல்களை அழைத்துவரச் சொல்லும்போது அவற்றில் ஏறிக் கடலுக்குச் சென்று வருவோம். இப் பயணங்களில் என்றும் மறக்கமுடியாத அனுபவங்கள் பலவற்றைப் பெற்றிருக்கிறோம். திரும்பி வீட்டுக்கு வரும்போது விமலா மச்சாள் எங்களுக்குப் பிடித்த உணவுகள் செய்து வைத்திருப்பார். அவர்கள் இருவருமாக எங்களைக் திருக்கோணேஸ்வரம் கோயில், கடற்கரை என்று பல இடங்களுக்கு

அடிக்கடி கூட்டிச் சென்றார்கள். எங்கள் விடுமுறைகளில் மிகச் சிறந்த விடுமுறை திருகோணமலையில் அவர்கள் வீட்டில் கழித்ததென்றே கூறுவேன். எங்களை அவ்வளவு அன்பாக அவர்கள் இருவரும் பார்த்துக்கொண்டார்கள்.

அவர்கள் திரும்ப கொழும்புக்கு வந்தபின் அவர்கள் மகள் வாசுகி பிறந்தாள். அது எங்கள் அனைவருக்கும் மிகவும் விசேஷமான காலமாக இருந்தது. இந்த மகிழ்சியான வாழ்க்கை 1983 கறுப்பு ஜூலையில் எவரும் சற்றும் எதிர்பாராத சோகமான முடிவுக்கு வந்தது.

அதன் பின்னர் விமலா மச்சாளுக்கு ஏற்பட்ட இழப்புகள் சொல்லில் அடங்காதவை. அவருக்கு ஏற்பட்ட வலிகளும் வேதனைகளும் எழுத்தில் அடங்காதவை. தன் அன்புக் கணவரையும் ஒரே மகளையும் இழந்த பின்னும் எவரையும் சார்ந்திருக்காது, மனத்துணிவுடன் தன் வாழ்க்கையைத் தொடர்ததுடன், தன்னைச் சுற்றியிருந்தவர்களுக்கு, அவர்கள் தேவையறிந்து, எந்தப் பிரதியுபகாரமும் எதிர்பார்க்காமல் தன்னாலான உதவிகளைச் செய்துவந்திருக்கிறார். இது அவரின் பெருந்தன்மைக்கு ஒரு சிறந்து எடுத்துக்காட்டு.

நான் அறிந்தவர்களுள் மிக நேர்மறையானவர் விமலா மச்சாள். வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவராகத் தன்னை உருவாக்கிக்கொண்டுள்ளவர். எது நடத்தாலும் அதைப் புன்னகையுடன் ஏற்றுக்கொள்ளப் பழகிக்கொண்டுள்ளார். அவர் சிட்னிக்கு வரும்போதெல்லாம், வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக்கொண்டு, நிலைமைக்குத் தகுந்தபடி எனக்கு ஆலோசனைகள் கூறுவார். அவரை நினைத்து நான் மிகவும் பெருமிதம் அடைகிறேன்.

அவர் நல்ல ஆரோக்கியத்துடன் அமைதியான வாழ்வு வாழ என் நல்வாழ்த்துக்கள்.

**நளாயினி சண்முகராஜா**

# இணையிலா மாது 'விமலா அக்கா'

அன்புநிறை உருவம்;
கருணைமிகு வடிவம்;
காண்போரை ஈர்த்து வசீகரிக்கும் தோற்றம்.
'விமலா' எனும் நாமத்துள் அடங்கிடு
இணையிலா ஆளுமையின் அடையாளம்.

அண்ணன் வழியில் எமக்குறவாகி,
சோதரிபோல் பழகித் துணையாகி,
என்றும் உடனுறை ஆதாரமாகி,
எப்போதும் எம்பலமாய் மிளிர்பவரே.

துன்பங்கள் அடுக்கடுக்காக அணிவகுத்தும்,
துயரங்கள் மலையாகி மலைப்புத் தந்தும்,
இழப்புக்கள் இயல்பாகிப் போனபோதும்,
மலைக்காது; சோராது வியப்புத் தந்தீர்.
உள்ளம் உரமாக; மனோபலம் வழிநடத்த,
'புதுமைப் பெண்'ணாக வியக்கவைத்தீர்.

நிமிர்ந்த நன்னடை,
தைரியத்தில் உறுதியுற்ற தோற்றம்;
நேர்கொண்ட பார்வை,
நேர்மையில் நேர்த்திபெற்ற வாழ்வு;
அஞ்சா நெஞ்சம்,
துணிவைக் கவசமாக்கிய நிமிர்வு;
திமிர்ந்த ஞானச் செருக்கு,
உண்மையறிவால் மேன்மைபெற்ற அழகு;
இதனால்
திறம்பா செம்மை மாதரென்றே உயர்ந்தவர் நீர்.

உற்றாரை நட்புக்கொண்டாரை உறவுகளை மட்டுமன்றி,
மற்றாரையும் துயருற்றாரையும் தேவைகொண்டாரையும்

அன்பால் அரவணைத்து;
கருணையால் உபசரித்து;
வண்மையால் மகிழ்வளித்து
வாழ்வு தரும் வண்மகளே வாழ்க.

எமக்கெலாம் நல்ல முன்மாதிரியாக
பெண்களுக்குப் பாடப்புத்தகமாக
மானுடர்க்கு இலட்சிய விளக்காக
சிறந்து வாழும் வழிகாட்டியே,
வண்ணமுற வாழ்க.
நலமாய், மகிழ்வாய், சிறப்பாய் வாழ்க.
வளமுடன் வாழ்கவே பல்லாண்டு.

என்றும் அன்புடன்
**மாணிக்கராஜா குடும்பம்**

# எங்கள் விமலா மாமி

இலங்கைத் திருநாட்டின் முக்கிய நகரினுள் ஒன்றான யாழ்ப்பாண குடாநாட்டின் தென்மேற்குக் கரையோரமாக அமைந்திருக்கும் ஓர் அழகிய கிராமமே அராலி எனும் ஊராகும். இவ்வூரினை பிறப்பிடமாகக் கொண்ட திரு,திருமதி வயித்தியலிங்கம் அவர்களுக்கு நான்காவது மகளாக இவர் அவதரித்தார். சிறுவயதிலேயே மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கும், பணிவும், செய்நன்றி மறவாமையும் உடையவராகத் திகழ்ந்தார். கல்விப் பணியிலும் நாட்டம் கொண்டு தான் கற்ற பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அவரால் இயன்ற உதவியை தாராள மனப்பாங்குடன் நல்கினார். அத்துடன் ஆலயத் திருப்பணிகளுக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்துள்ளார். இப்படிப்பட்ட இவர் பல்லாண்டு காலம் இப் பூவுலகில் சுகதேகியாக வாழ வேண்டும் என எல்லாம் வல்ல அராலி சிந்தாமணிப் பிள்ளையாரை வேண்டிக்கொள்கின்றோம்

**அ. சேனாதிராஜா குடும்பம்**

# விமலா மச்சாள்

விமலா மச்சாள் என்று நாங்கள் அன்புடன் அழைக்கும் இவர் என் அம்மாவின் மச்சாளின் மகள். இவர் தந்தையார் திரு வயித்தியலிங்கம் அவர்களை நாங்கள் கதை மாமா என்று அழைப்போம் அவர் எங்களுக்கு எப்போதும் நல்ல நல்ல கதைகள் சொல்வதால் அப்படி அழைக்கத் தொடங்கினோம்.

விமலா மச்சாளைச் சிறு வயதிலிருந்தே எனக்குத் தெரியும். அவர் கொழும்புக்கு வரும்போது எங்கள் பக்கத்திலிருந்த அவர் அக்கா வீட்டில் தங்குவார். நாங்கள் யாழ்ப்பாணம் போகும்போதும் எப்போதும் அவர்கள் வீட்டுக்குப் போவோம்.

சின்ன வயதில் அவர்கள் வீட்டில் நாடகம் நடித்தது நினைவில் இருக்கிறது. மெத்தைகளை எடுத்துவிட்டுக் கட்டில்களை மேடையாக்கி அதில் நாடகங்கள் போடுவோம். சேர்ந்து பல விளையாட்டுக்கள் விளையாடுவோம். நிறையக் கதைப்போம். கதைப் புத்தகங்களைப் பரிமாறி வாசிப்போம். பின்னர் விமலா மச்சாள் என் மாமாவை மணந்து எங்கள் பக்கத்து வீட்டில் குடியிருந்தார். அப்போது தினமும் பலமுறை சந்தித்துப் பேசிக்கொள்வோம்.

அவர்களின் மகள் பிறந்தபோது நான் திருமணமாகிச் சிங்கப்பூரில் இருந்தேன். 1983ஆம் ஆண்டு நடந்த கலவரத்தில் மாமா இறந்தபின் தனியாகத் துணிவுடன் செயற்பட்டுத் தன் மகளை நன்கு வளர்த்தார். காலம் வேறு திட்டம் வைத்திருந்தது. மகளையும் இழக்கும் நிலைக்கு ஆளானார். ஆனால் மனம் தளராமல் தன் கணவரின் குடும்பத்தினரைத் தன் குடும்பமாகப் பாவித்து அவர்களில் பலருக்கும் பல உதவிகளைச் செய்தார். கல்வி, திருமணம் என அவர்களின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருந்து பெரிதும் உதவினார்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது" என்கிறார்
திருவள்ளுவர். இவர் செய்தவை பெரிய உதவிகள். ஞாலத்தைவிடவும் மாணப் பெரியவை.

எங்கள் விமலா மச்சாளைப்போலத் துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டவர்கள்மிகச்சிலரேஇருப்பார்கள். இவரைப்போலவாழ்க்கையை நேர்மறையான அணுகுமுறையுடன் எதிர்கொள்பவர்கள் அதிகமானவர் களைக் காண முடியாது. வாழ்க்கையில் எது நடந்தாலும், யார் எப்படி நடந்து கொண்டாலும், அவைகளால் மனம் சலிக்காமல், மனம் துவளாமல், தன் போக்கில், தனக்குச் சரி என்று பட்டதைத் துணிச்சலுடன் செய்து, தன் வாழ்கையை நடத்திச் செல்லும் இவரைக்குறித்து நான் மிகவும் பெருமிதம் கொள்கிறேன்.

வாழ்க்கையில் தனக்கு மகிழ்ச்சிதரும் விஷயங்களைச் செய்து, இவர் தொடர்ந்து மகிழ்ச்சியாக வாழ நானும் என் குடும்பத்தினரும் எம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சிவகாமி தயாநிதி**

# இரும்புப் பெண்மணி

அண்ணியின் அக்கா விமலா மணிவாசகன், முதல் முதலில் நாங்கள் பார்த்த போது ஓர் அன்னப் பறவையாக காட்சி அளித்தவர். விமலா அக்கா எனத்தான் நம் குடும்பத்தில் அனைவரும் அன்பாக அழைப்போம்.

சிரித்த முகம், அன்ன நடை, அழகில் ஓர் மகாலஷ்சுமி, வசீகரம் அத்தனையும் வடிவமைத்த ஓர் பெண். ஆழகான குடும்பமாக இருந்த அவரின் வாழ்க்கையில் இரு உயிர்களை இழந்து, பின்னர் மனதளவில் நிறைய சோகங்கள் எல்லாவற்றையும் தாங்கி ஓர் இரும்புப் பெண்மணியாக இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

விமலா அக்காவை இன்னம் சொல்லிக் கொண்டே போகலாம், இப்பொழுது தன் உறவுகளுடன் நிம்மதியாக, அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

எங்கள் குடும்பத்தாருக்கும் எத்தனையோ உதவிகள் பண்ணிய விமலா அக்காவை என்றென்றும் என்னென்றும் சந்தோஷமாக வாழ வாழ்த்துகிறோம்.

**ஜெயந்தி**

# Vimala Machchal

We fondly call her Vimala Machchal. She is the daughter of my amma's cousin. We called her father Mr Vaithilingam 'Kathai mama' which means 'Story uncle'. He always used to tell us good stories, hence that name.

I knew Vimala Machchal since I was very young. Whenever she came to Colombo She stayed at her sister's place (close to our house). Every time we went to Jaffna we spent time at their house.

I remember staging dramas at their house when we were very young. We used to remove the mattresses from the beds and used` them as stages to perform dramas. We have played lots of games together. Have chatted for hours and exchanged story books.

Later she married my uncle and moved next door to us. We met and talked several times every day. When their daughter was born, I was married and was living in Singapore. When my uncle died during the Sri Lankan problems in 1983, she confidently raised her daughter by herself. Time had other plans and she sadly lost her daughter too. But she did not lose her confidence. She considered her husband's family as her own and helped some of them in many ways. She helped them with their education and the time of their marriages and was instrumental in making their lives successful. Thiruvalluvar says, "A timely help, though small, Is of greater value than all the earth." The help that she provided was not small by any means and the value of it is definitely greater than all the earth.

We meet very few people with this kind of self-confidence and courage in facing life. Very few people will be able to face life with such a positive attitude. Life threw many challenges at her and people did not always treat her fairly. But our Vimala Machchal was not shattered or disheartened by these challenges. She was able to face life with confidence and a positive attitude and continues to do what she thinks is right. I am very proud of Vimala Machchal for these qualities.

My family joins me wishing her all the best in life. May she continue to lead a happy life doing things that she considers important and fulfilling.

**Sivakamy Thayanithy**

# My Connection to Home

Growing up in Australia, I have always struggled with a sense of disconnection to my culture and extended family in Sri Lanka due to the physical barrier. Seeniamma's ever-growing presence throughout my life has helped tie that sense of connection.

Despite a series of misfortunate events from Seeniamma's past, she was resilient and pushed herself out of her despair. She transformed herself into a woman who miraculously still looked for the 'good' in the world and integrated herself into society and her extended family. She found a way to express her maternal love to the people around her, even breaking down physical barriers all around the world, resulting in numerous trips to Australia and staying with us. Seeniamma first came to Australia with Ammamma when I was just 5 years old. We had just moved to our family home and I remember the new house being filled with stories, laughter, and warmth. Seeniamma helped settle us in and even stitched and hung the curtains all around the house with my mum. I vaguely remember Ammamma would make idiappam on the floor, and seeniamma would hand feed me, chasing after me while I ran around the new house. I was so excited to be around them and would love to do everything together. I would want to sleep with seeniamma and end up kicking her during the night, I would walk to and from school with her while complaining about my feet hurting. One time, I even ended up crying at school because I didn't want seeniamma to leave me there alone, which is a testament to the joy I felt being around her.

I would always appreciate her coming to visit us in Australia. There was just this sense of energy and happiness radiating through the house whenever she was here. We would always have great food on the table and never had to eat the same dish twice in a row. Every time that she came to visit (in 2006, 2012, and 2018) she would help look after me, especially when my parents were at work. She had shown nothing but kindness and love towards me, and raised me as her own during her visits.

In her most recent stay during 2022 and 2023, I felt the dynamic changed a little between us. We still had our stories and inside jokes, and loved to act childish with one another, but I felt that I was able to look after her this time around. I was able to take her shopping and buy what she wanted as I was now working a full time job. I could entertain her with movies and

songs, help her experience different cuisines and take her to visit different attractions. She would feel comfortable asking me for help and advice and I ensured I would always assist her in any way I could.

I have an immense amount of respect and gratitude for Seeniamma that I told my mum to ensure when we introduced my partner to our extended family, it would have to be to her first. Seeniamma quickly got to know my partner and immediately started to spread her infectious love towards her too. Soon enough, we were all laughing and sharing stories, and Seeniamma would ask me, what seemed like everyday, when was the next time my partner would come over.

I know we are already planning occasions of when we will see each other next, but I already feel disappointed in thinking of her departure back to Sri Lanka. The house will be a lot quieter as we will all go back to our normal repetitive lifestyle. I look forward to seeing her next but would like to use this passage to thank her for all the effort she has put in getting to know me over the years.

**Sanjeev**

- "You must be alert in all fields and in everything around you. There is no point in depending on the world around you – and the government.
  Self-help is the best help."

- "If there is self control in the world, there shall not be scarcity. If there is scarcity, then there shall be no self control at all."

*– His Holiness Bangaru Adigalar Amma*

# My Joyful Time with Seeniamma

Seeniamma is the first extended relative of Sanjeev's that I've met and been introduced to. On multiple occasions, Sanjeev has mentioned she is his favourite Auntie and was excited for me to meet her. Seeniamma is his favourite because she has always made time for him and visits a lot from Sri Lanka, helping him maintain a strong connection to his culture and family's origin through her stories, food and Tamil language. Sanjeev is always saying good things about Seeniamma and I was very nervous to meet her. My heart was racing a lot that day, thankfully Seeniamma welcomed me with a loving hug and I found it easy to chat with her despite the language barrier and I could see why Sanjeev loves his Auntie very much. She is very kind, caring and fun to be around and is always making sure that you are comfortable in her presence.

There were times when Sanjeev and I playfully tickle and annoy each other around the house and there was one time where I hid behind Seenamma and she tried to protect me from Sanjeev's tickle attack. It was very amusing to see Sanjeev's disbelief as his favourite auntie sided with me instead of him. I remember that the house was very noisy because of the laughter and happiness we all could experience with Seeniamma.

Seeniamma has a sweet tooth and I always like finding interesting sweets for her to try. On the first day that I met her, she was very excited to eat the chocolates I bought for her. She is always excited to try new desserts such as peanut butter icecream, churros, and pandan-based dishes. Recently I have introduced her to some Vietnamese desserts such as black sticky rice with coconut cream and mung bean pudding. I liked spoiling her with these experiences and its nice to see her warm smile and happy reactions.

Seeniamma enjoys watching Tamil movies. While Seeniamma was in Australia, Ponniyin Selvan II came out in the theatres. Amma, Appa, Seeniamma, Sanjeev and I all went to watch the movie at the theatre. It was very fun night, we all ate a lot of popcorn and Seeniamma had a great time. We spent the next several days talking about who our favourite characters were and what we liked and didn't like about the movie. Seeniamma's favourite character was Arulmozhi Varman because she found him very cool.

During Seeniamma's time in Australia, I would go over on Saturday mornings to do some cooking as a family. We would cook many curries such as the eggplant curry, dahl curry and spinach curry. There was one occasion where I was using the mortar and pestle to crush the cardamom seeds and clumsily broke the pestle when it rolled off the table. I remember Seeniamma asking if I was okay and then she laughed and made jokes about the broken utensil afterwards with Sanjeev so that I wouldn't feel bad about it. I'm sure she will always remember this as a funny story and laugh in the future.

Despite not knowing Seeiamma for long, I can feel her love and kindness through her actions and how she always treats me as part of the family. I'm always excited to see her and spend time with her. She always welcomes in with a warm hug and smile and I can see why Sanjeev treasures her as his favourite auntie.

**Tina**

- "Gold and wealth are equivalent to corpses. Don't give importance to them! Instead be charitable. This will redeem you from all sins. At the same time, do not turn the Adhiparasakthi Spiritual Movement into the movement of fostering lazy persons. Provide tools to a poor man who wants to earn his livelihood through hard work. Teach him to earn his livelihood by hardwork."

- "If Nature is allowed to prosper, then family too will prosper simultaneously. The resources of your family will be enhanced only if the resources of Nature are kept intact"

– ***His Holiness Bangaru Adigalar Amma***

# விமாலா மாமி

எனது அப்பப்பாவிற்கு இரண்டு இளைய சகோதரர்கள். முதலாவது இளைய சகோதரர் சரவணமுத்து (ரியூப் அப்பப்பா) இரண்டாவது இளைய சகோதரர் வயித்தியலிங்கம் (சின்ன அப்பப்பா) எனது அப்பப்பாவிற்கு ஒரே மகன் எனது அப்பா. சின்ன அப்பப்பாவிற்கு ஆறு பிள்ளைகள். அதில் நான்கவதாகப் பிறந்தவர்தான் விமலா மாமி. எனது அப்பாவுடன், சின்ன அப்பப்பாவின் பிள்ளைகள், ரியூப் அப்பப்பாவின் பிள்ளைகள் எல்லோரும் கூடபிறந்த அண்ணனாகத்தான் பழகுவார்கள்.

நாட்டில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக நான் விமலா மாமியின் அக்கா வீட்டில் விமலா மாமியுடனும் சிலகாலம் தங்கியிருந்தேன். நானும் மாமியும் மாமி மருமகள் என்றில்லாமல் சினேகிதர்கள் போலத்தான் பழகுவோம்.

ஒரு நாள் நான் காஸ் (Gas) அடுப்பில் சமைத்துக் கொண்டு இருக்கும் போது காஸ் அடுப்பையும் சிலிண்டரையும் தொடுக்கும் டியூப் கழன்று நெருப்பு பிடித்து விட்டது. நான் "ஐயோ ஐயோ" என்று கத்திக் கொண்டு குசினியை விட்டு வெளியில் ஓடி வந்தேன். அந்த சமயம் விமலா மாமி எல்லோருக்கும் காலை சாப்பாட்டிக்குப் பாண் வெட்டித் தயாரித்துக் கொண்டிருந்தவர், நான் கத்துவதையும், குசினியில் நெருப்பு எரிவதையும் பார்த்து ஓடிப் போய் சிலிண்டரில் இருந்து வரும் காஸ்சை அணைத்து விட்டார். அவர் அதை செய்யாது இருந்தால் சிலிண்டர் வெடித்து வீடே எரிந்திருக்கும். அவரின் சமயோசிதத்தைப் பார்த்து வியந்தேன்.

விமால மாமி இரக்க குணமுள்ளவர். அத்துடன் எல்லோருக்கும் உதவியும் செய்வார். கோபம் வருவதே இல்லை. அவர்கள் வீட்டில் இருந்த போது எனக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. அப்போது எனக்குத் தேவையான பல உதவிகள் செய்தவர். அவருடன் இருந்த நாட்களை என்னால் இன்னும் மறக்கவே இயலாது.

மாமியுடைய வாழ்க்கையில் எத்தனையோ இன்னல்கள் வந்தும் திடகாத்திரமாக வாழ்ந்து வருகிறார். விமலா மாமி இன்னும் நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

மருமகள்

**ஜெ. மோகனா**

கனம் அம்மணி அவர்கட்கு,

எமது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் பல வழிகளிலும் உறுதுணையாக நிற்பவர் மதிப்பிற்குரிய திருமதி விமலா மணிவாசகன் அவர்களே ஆவார். இவர் தனது மகளான செல்வி வாசுகி மணிவாசகன் ஞாபகார்த்தமாக ரூபா ஐம்பதினாயிரத்தினை (50,000/=) தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பிட்டுள்ளார் என்பதையிட்டு உளமாற நன்றி தெரிவிக்கின்றேன். இந்நிலையான வைப்பிலிருந்து ஒவ்வொரு வருட இறுதியிலும் வரும் வட்டிப் பணத்தினை "விமலா-வாசுகி-மணிவாசகன்" என்ற கணக்கினை ஆரம்பித்து அதில் வைப்பிலிடப்படுகிறது. இவ்வட்டிப்பணம் தரம் 1-தரம் 5 வரையான மாணவர்களில் ஒவ்வொரு தரத்திலும் ஒவ்வொரு சிறந்த மாணவனை தெரிவு செய்து (மொத்தம் 3 மாணவர்கள்) அவர்களுக்கு தங்க காது அணிகலனும் (1 சோடி தோடும்) சான்றிதழும் வழங்கி கௌரவிக்குமாறு வேண்டிக்கொண்டார். அதற்கிணங்க எமது அதிபரும், ஆசிரியர்களும், பழைய மாணவர் சங்கமும் அவருடைய உதவியினை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டோம். ஒவ்வொரு வருட இறுதியிலும் சிறந்த 3 மாணவர்களின் பெயர் விபரங்கள் அனுப்பி வைக்கின்றேன். மதிப்பிற்குரிய திருமதி விமலா மணிவாசகன் அவர்களுக்கு, எமது பாடசாலை சமூகம் என்றும், நன்றியுடையவர்களாக இருப்போம் என்று பணிவன்புடன் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி!

இங்ஙனம்
பழைய மாணவர் சங்கத் தலைவர்
**திருமதி சுபாங்கினி சுஜீவன்**

# வில்லுப்பாட்டு

Chorus : தந்தனத்தோம் என்று சொல்லியே என்று சொல்லியே வில்லினில் பாட வில்லினில் பாட - வந்தருள்வாய்

கணபதியே! வந்தருள்வாய் கணபதியே!

பிருந்தா : பெரியோர்களே! தாய்மார்களே! குழந்தைகளே! எங்களுக்குத் தெரிந்த உங்கள் சேவைத் திலகத்தைப் பற்றி,

அச்சுதன் : சேவைத் திலகத்தைப் பற்றி,

பிருந்தா : ஒரிரு வார்த்தைகளை எங்களுக்குத் தெரிந்த பாணியில் கூறுகிறோம்.

Chorus : ஆமாம்

பிருந்தா : இதில் எதாவது குற்றம் குறை இருந்தால்,

அச்சுதன் : குற்றம் குறை இருந்தால்

பிருந்தா : பெரும் மனத்தோடு மன்னித்தருள வேண்டுமென்று,

அனுராதா : வேண்டுமென்று,

பிருந்தா : மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

Chorus : ஆமாம்

பிருந்தா : சென்ற நூற்றாண்டிலே

அச்சுதன் : இருபாதம் நூற்றாண்டிலோ?

பிருந்தா : ஆமாம், இருபாதம் நூற்றாண்டிலே வயித்தியலிங்கம் என்னும் பெரியார் அன்னபூரணி என்னும் மங்கையை பெரியோர்கள் ஆசீர்வாதத்துடன் கரம் பற்றினார்.

செந்தூரன் : கல்யாணம் முடித்தாரோ?

பிருந்தா : ஆமாம், இருவரும் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்து மூன்று நற்புத்திரர்களைப் பெற்றனர்.

அச்சுதன் : நற்புத்திரர்களைப் பெற்றனர்.

பிருந்தா : 1955 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி ஒரு பெரும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைத்தது.

செந்தூரன் : என்ன அது?

அச்சுதன் : சுவிப்பில் பெரிய தொகை பணம் கிடைத்ததோ?

பிருந்தா : இல்லை, இல்லை அதைவிடப் பெரிய பாக்கியம்

செந்தூரன் : ஓ அப்படியென்றால் என்ன அது?

பிருந்தா : விமலா எனும் மகாலஷ்மிக்குப் பெற்றோர் ஆனார்கள்.

அச்சுதன் : அப்படியென்றால் அது நூற்றிக்கு நூறு சரிதான்.

அனுராதா : விமலா பிறந்த பிறகுதான் விமலாவின் தந்தைக்கு நிரந்தர உத்தியோகமும், அதிபர் பதவியும் கிடைத்தது.

பிருந்தா : நளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விமலா வளர்ந்து வந்தார். விமலாவுடன் அவரது மச்சாள் சந்திராவும் சேர்ந்து ஒரே வீட்டில் வளர்ந்து வந்தார்.

செந்தூரன் : எப்படி இருவரும் ஒரே வீட்டில் இருந்தார்கள்?

பிருந்தா : அக்காலத்தில் கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டில் எல்லோரும் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள்.

Chorus : ஆமாம்

அச்சுதன் : விமலாவின் தாயும் சந்திராவின் தந்தையும் சகோதரர்கள்.

பிருந்தா : இருவரும் குழந்தைகளாக இருந்த போது விமலாவின் மாமியார் பால் காச்சி சந்திராவிற்காக எடுத்து வரும் போது,

செந்தூரன் : எடுத்து வரும் போது,

பிருந்தா : விமலா பாய்தடித்து தவழ்ந்து வந்து அதை வாங்கிக் குடிப்பார்.

அச்சுதன் : விமலாவின் தாயார் தான் கொண்டு வரும் பாலை சந்திராவிற்குக் கொடுப்பார்.

அனுராதா : இது நித்தமும் நடைபெறும் நிகழ்வு.

செந்தூரன் : அவர்களுக்குள் சண்டைவருவதில்லையோ?

பிருந்தா : அவர்களை எங்களைப் போல் என்று நினைக்கிறீர்களோ?

அச்சுதன் : அவர்கள் மிகவும் அனுபவசாலிகள், பொறுமைசாலிகள், உலகத்தை நன்றாகப் புரிந்தவர்கள்.

Chorus : ஆமாம்

அச்சுதன் : பாடசாலை செல்லும் வயது விமலாவிற்கு வந்தது.

Chorus : ஜம் சிக்குச் சிக்கு ஜம்
ஜம் சிக்குச் சிக்கு ஜம்
ஜம் சிக்குச் சிக்கு ஜம் ஜம்

அனுராதா : ஓடிவிளையாடு பாப்பா!
நீ ஓய்திருக்க லாகாது பாப்பா!
கூடிவிளையாடு பாப்பா!
ஒரு குழந்தையை வையாதே பாப்பா.

Chorus : ஜம் சிக்குச் சிக்கு ஜம்
ஜம் சிக்குச் சிக்கு ஜம்
ஜம் சிக்குச் சிக்கு ஜம் ஜம்

அனுராதா : கொத்தித் திரியுமந்தக் கோழி
அதை கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்த காக்காய்
அதற்கிரக்கப்பட வேணும் பாப்பா!

Chorus : ஜம் சிக்குச் சிக்கு ஜம்
ஜம் சிக்குச் சிக்கு ஜம்
ஜம் சிக்குச் சிக்கு ஜம் ஜம்

அனுராதா : காலை எழுந்தவுடன் படிப்பு
பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு
என்று வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

Chorus : ஜம் சிக்குச் சிக்கு ஜம்
ஜம் சிக்குச் சிக்கு ஜம்
ஜம் சிக்குச் சிக்கு ஜம் ஜம்

பிருந்தா : என்பதற்கிணங்க ஆரம்பக் கல்வியை யாழ் இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும், இடை நிலைக் கல்வியை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் பயின்றார்.

Chorus : ஆமாம்

அச்சுதன் : மங்கைப் பருவமடைந்ததும் சமையல், தையல் ஆகிய கலைகளில் தேர்ச்சி பெற்றார்.

Chorus : ஆமாம்

பிருந்தா : இதன் பயனாக மணிவாசகன் எனும் பொறியியலாளரைக் கைபிடித்தார்.

Chorus : ஆமாம்

அச்சுதன் : பொதுவாக எல்லோருக்குமே மல்லிகைப் பூவென்றால் சரியான விருப்பம்.

Tina : எனக்கும் தான்.

அச்சுதன் : மணிவாசகனும் இதற்கு விதிவிலக்கல்ல.

Chorus : விதிவிலக்கல்ல.

அனுராதா : மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ!
எந்நேரமும் உன் ஆசை போல் - பெண்
பாவை நான் பூ சூடிக் கொள்ளவோ?

வான் மேகங்கள் வெள்ளி ஊஞ்சல் போல்
திங்கள் மேனியை தொட்டு தாலாட்டுது
குளிர் காற்றிலே தளிர் பூங்கொடி
கொஞ்சி பேசியே அன்பை பாராட்டுது

என் தேவனே! உன் தேவி நான்
பொன் மாங்கல்யம் வண்ண பூ சரம்
மஞ்சள் குங்குமம் என்றும் நீ தந்தது
நம் இல்லம் சொர்க்கம்தான்
நம் உள்ளம் வெல்லம்தான்
ஒன்றோடு ஒன்றானது

என் சொந்தமும் இந்த பந்தமும்
உன்னோடுதான் நான் தேடிக் கொண்டது
மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ!

பிருந்தா : "என் தேவனே உன் தேவி நான்" என்றவாறு அவருடன் சந்தோஷமாக வாழ்ந்ததின் பயனாக வாசுகி என்னும் அருமை மகளுக்குத் தாயானர்.

செந்தூரன் : வாசுகி என்னும் அருமை மகளுக்குத் தாயானர்.

அச்சுதன் : இப்பொழுது தான் விதி அவர் வாழ்க்கையில் கொடுரமாக விளையாடியது.

Chorus : எப்படி?

பிருந்தா : அறியாமையினால் சில கயவர்கள் இனக் கலவரம் என்னும் பெயரில் விமலாவின் ஆருயிரான மன்னன் மணிவாசகனின் உயிரைப் பறித்தார்கள்.

சந்தூரன் : அச்சச்சோ பரிதாபம்.

அச்சுதன் : காலன் கயவர்கள் வடிவில் விமலாவின் வாழ்க்கையில் விளையாடினான்.

அனுராதா : "சுமைதாங்கி சாய்ந்தால் சுமை என்ன ஆகும்
மணிதீபம் ஓய்ந்தால் ஒளி எங்கு போகும்
சுமைதாங்கி சாய்ந்தால் சுமை என்ன ஆகும்
மணிதீபம் ஓய்ந்தால் ஒளி எங்கு போகும்"

அச்சுதன் : கணவரை இழந்த விமலா பெற்றோர்களிடம் தஞ்சமடைந்தார்.

பிருந்தா : பெற்றோர்களும் அவருக்கு உறுதுணையாகவும், ஆறுதலாகவும் இருந்தனர்.

Chorus : ஆமாம்

பிருந்தா : தாய்க்குத் தப்பாமல் மகள் வாசுகியும் எல்லோரிடமும் கனிவாகவும், அன்பாகவும் இருந்தாள்.

செந்தூரன் : கனிவாகவும், அன்பாகவும் இருந்தாள்.

பிருந்தா : வாசுகியின் சின்னம்மாவிற்கு ஒரு தடைவ கையில் கிடைத்த பிள்ளை தவறிவிட்டான்.

அனுராதா : தவறிவிட்டான்.

அச்சுதன் : மறு தடைவ கருவில் உதித்த பிள்ளை மறைந்துவிட்டான்.

அனுராதா : மறைந்துவிட்டான்.

பிருந்தா : சிறியதாயின் சோகத்தை தீர்க்கும் வகையில் சிறுமி வாசுகி அவரை 'அம்மா' என அன்போடு அழைத்து வந்தாள்.

Chorus : ஆமாம்

அனுராதா : "இரண்டு தாய்கொரு பிள்ளை – என்று
வாழ்ந்திடும் முல்லை
இரண்டு தாய்கொரு பிள்ளை – என்று
வாழ்ந்திடும் முல்லை யாக வளர்ந்தாள்."

அச்சுதன் : இப்படி ஒரு பக்குவம் எப்படி அந்த சிறுமிக்கு வந்தது.

பிருந்தா : அது இரத்தத்துடன் கலந்தது. எல்லோருக்கும் வராது.

அச்சுதன் : காலன் மீண்டும் இவருடன் விளையாடினான்.

பிருந்தா : நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த மகள் வாசுகியும் விமலாவை விட்டுப் பிரிந்தார்.

அனுராதா : அந்தோ! பரிதாபம்

செந்தூரன் : எப்படி விமலாவினால் இந்த சோதனையைத் தாங்க முடிந்தது.

அனுராதா : "சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனை தான் வாழ்க்கை யென்றால் தாங்காது பூமி
சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனை தான் வாழ்க்கை யென்றால் தாங்காது பூமி"

அச்சுதன் : என நினைத்து உலகிலுள்ள நல்ல விடயங்களைப் பார்க்கவும், செய்யவும் தொடங்கினார் விமலா.

Chorus : ஆமாம்

பிருந்தா : தான் படித்த கல்லூரிக்கும், மகள் படித்த ஆரம்பப் பாடசாலைக்கும் உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அவர் செய்த உதவிகள் அளப்பரியன.

அனுராதா : அப்படி என்ன செய்தார்.

பிருந்தா : என்னைக் கேட்காதையுங்கோ, இங்குள்ளவர்களைக் கேளுங்கோ.

அச்சுதன் : இவ்வளவு நல்ல குணங்கள் எப்படி வந்தது?

செந்தூரன் : அதைத்தான் ‘வளர்ப்பு’ என்பார்கள்.

அனுராதா : “கொத்தித் திரியுமந்த கோழி
அதை கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்த காக்காய்
அதற்கிரக்கப்பட வேணும் பாப்பா!”

அச்சுதன் : என சிறுவயதில் அவர் படித்தது, கூட்டுக் குடும்ப வாழ்வின் அனுபவங்கள், குடும்ப அங்கத்தினரின் குணங்கள் தான் இதற்குக் காரணம்.

அனுராதா : சுருக்கமாகச் சொன்னால் குடும்பச் சூழ்நிலைதான் இதற்குக் காரணம்.

செந்தூரன் : அதனால் தான் நாங்கள் எல்லோரும் உங்கள் முன் இப்படியொரு நிகழ்வினை அளிக்க கூடியதாக இருந்தது.

பிருந்தா : இதனைப் பொறுமையுடன் கேட்டதற்கு எங்கள் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறோம்.

Chorus : ‘வணக்கம்’ பலமுறை சொன்னோம் சபையினர் முன்னே

… (3)

# திருமதி விமலா மணிவாசகன் அவர்களின் இளமைக்காலம்








# திருமதி விமலா மணிவாசகன் அவர்கள் உறவுகளுடன்
























## யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
## பரிசளிப்பு வைபவம் 2019

**சிறப்பு விருந்தினர் : திருமதி விமலா மணிவாசகன்**










# யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## வெள்ளிவிழா மலர் வெளியீடு பரிசுத்தினம் 2004

### சிறப்பு விருந்தினர் : திருமதி விமலா மணிவாசகன்







## மெய்வல்லுனர் போட்டி நிகழ்வு



## 2022 ஆம் ஆண்டு யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை சமூகத்தின் கௌரவிப்பு











## சேவைத் திலகம்

## திருமதி விமலா மணிவாசகன்

2022

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

சமூகத்தின் கௌரவிப்பு

# சேவைத் திலகம்

## விமலா மணிவாசகன்

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை,

யாழ் இந்து மகளிர் கல்லூரியின்

பழைய மாணவி

# உதவியின் மறுஉருவம் திருமதி விமலா மணிவாசகன்



**பாடசாலை மாணவர்கள் சுவஸ்திகா தணிகாசலம்(தரம் 1) மற்றும்
துளசிகா மூர்த்தி (தரம் 5) மாணவர்களுக்கு செல்வி வாசுகி மணிவாசகன்
அவர்களின் நினைவாக காதணி மற்றும் சான்றிதழ்கள்
திருமதி விமலா மணிவாசகன் சார்பாக வழங்கப்பட்டது**



J / Jaffna Hindu Ladies' Primary School

Best Student of the year 20.....

*This is to Certify that Miss ......................................... of*

*Grade................................*

*was awarded this prize for excellent performance in all subjects.*

*This is given in memory of Miss. Vasuki - Manivasakan by her mother Mrs. Vimala - Manivasakan.*

*..............................* *..................................*

*Date* *Principal*

**திருமதி விமலா மணிசாசகன் அவர்கள் தமது புதல்வி செல்வி வாசுகி மணிவாசன் நினைவாக 40 கதிரைகள் யாழ் இந்து மகளிர் பாடசாலைக்கு உதவிக்கரம் வழங்கினார்கள்**






வில்லுப்பாட்டு








06/11/2023 இல் எமது வீட்டுக்கு போகும் வீதிக்கு பெயர் வைத்த நிகழ்வு நடைபெற்றது. இந்த ஏற்பாட்டை அமரர்கள் வைத்திலிங்கம் அன்னபூரணி அம்மா (நெசவு அம்மா) அவர்களின் மகள் விமலாக்கா ஏற்பாடு செய்தார்.

இந்த வீதிக்கு எப்படி ஒரு தனிநபர் பெயர் வைக்கலாம் என யோசிக்கலாம்.

இவர்கள் தமது சொந்த பணத்தில் பல மில்லியன் செலவில் ஒரு km உட்பட்ட தார் வீதியை உருவாக்கியுள்ளனர். இந்த வீதி 12 குடும்பங்களின் காணிகளுக்கான வீதியாக உள்ளது.

இந்த வைத்திலிங்கம் அன்னபூரணி அம்மா குடும்பம் பல ஆண்டுகளுக்கு முன்பு எமது கிராமத்தில் உள்ள மிக அதிகமான யுவதிகளுக்கு வாழ்வாதாரமான வேலைவாய்ப்பாக நெசவுசாலை அமைத்து வேலைவாய்ப்பு வழங்கினார்கள். அதைவிட நல்லின பசுமாடுகள் வளர்த்து பலருக்கு வேலைவாய்ப்பும் ஊருக்கு ஊட்டச்சத்தான பாலும் வழங்கினர்கள்.




இப்படி இந்த குடும்பம் அன்று தொட்டு இன்றுவரை கிராமத்துக்காக உதவியாகவும் இருந்து வருகின்றனர். அதனால் இந்த பெயர் வைக்க தகுதியான குடும்பமே அவர்கள். இனி இந்த போக்குவரத்து வீதியான அராலி மத்தி சிவன் கோவில் வீதியில் வைத்திலிங்கம் அன்னபூரணி உப வீதியாக நாமம் பெறுகிறது.

கிராமமக்களினதும் அரச அனுமதியும் பெற்று சட்டபூர்வமாக உருவாக்கப்பட்டது.

– **சந்திரன், அராலி**

உ

# அழைப்பிதழ்

எமது சகோதரி **சேவைத் திலகம் திருமதி. விமலா மணிவாசகனின்** சமூக சேவையைப் பாராட்டி நடைபெறும் நிகழ்ச்சியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் இரவு போசன விருந்திலும் கலந்து கொண்டு அவரை கௌரவித்து சிறப்பிற்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

யூ.எஸ் ஹோட்டேல் (U.S Hotel)
855, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக் கிழமை 24-12-2023 6 PM to 9 PM

**தங்கள் வருகையை டிசம்பர் 10ஆம் திகதிக்கு முன் அறிவிக்கவும்**

அறிவிக்க வேண்டிய கை தொலை பேசி இலக்கம் - **077 532 5085**

தங்கள் நல்வரவை நாடும் சகோதரர்கள்

# நன்றி நவில்கிறேன்



யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை சமூகம் 2004, 2019ஆம் ஆண்டுகளில் நடத்திய பரிசளிப்பு விழாக்களுக்கு சிறப்பு விருந்தினராக அழைத்துக் கௌரவித்தமைக்கும், 2022ஆம் ஆண்டு எனக்கு 'சமூக சேவகி' என்ற விருதை வழங்கி என்னைச் சிறப்பித்தமைக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு, 2014ஆம் ஆண்டு என்னை 'சிறந்த பெண்மணி'யாக கௌரவித்தமைக்கும், இம் மலர் சிறப்பாக வெளிவர கட்டுரைகளை வழங்கிய யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, யாழ் இந்து மகளிர் கல்லூரி சமூகத்தினருக்கும், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகளைக் கூறுகின்றேன்.

இம்மலரினை அழகாக வடிவமைத்து, அச்சடித்துத் தந்த யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும், அதன் உரிமையாளர் பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னை ஈன்றெடுத்து கருத்தோடு வளர்த்த மனித நேயமிக்க காலஞ் சென்ற எனது பெற்றோர்களுக்கும், அதற்கு உறுதுணையாக நின்ற எனது சகோதரர்களுக்கும், என்னைக் கரம்பிடித்து அன்போடும், அக்கறையோடும், எல்லா விதத்திலும் பக்க பலமாக நின்ற அமரரான எனது கணவருக்கும், எனக்கு தாய்மை எனும் அந்தஸ்தையும், இன்பங்களையும் அள்ளித் தந்த இறைவன் அடி சேர்ந்த எனது மகளுக்கும், எனக்கு அருள்பாலித்த எல்லாம் வல்ல சிந்தாமணிப் பிள்ளையாருக்கும் எனது உள்ளார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இங்ஙனம்

**விமலா மணிவாசகன்**
61/2 Abdul Gaffoor Mawatha
Colombo 03



சேவையில் ஈடுபடுவோருக்கு மனஉறுதியோடு
சாந்தமும், புன்சிரிப்பும் மிகவும் அவசியமானவை.
*– மஹா பெரியவா*

ஒரு கெட்ட பழக்கத்தைவிட வேண்டும் என்றால்,
ஒரு நல்ல பழக்கத்தை வளர்த்துக் கொள்ள
வேண்டும். இதற்கு தீவிரமான முயற்சி தேவை.
– இராமகிருஷ்ணர்





எப்போதெல்லாம் உன் மனம் குழம்புகிறதோ..
எப்போதெல்லாம் உனக்கு எதிர்ப்புகள்
வருகிறதோ... அப்போதெல்லாம் ஒரு பத்து
நிமிடம் மௌனமும் தியானமும் மேற்கொள்!
– அருள்திரு பங்காரு அடிகளார்

உனக்கு உதவியவரை ஒரு போதும் மறக்காதே!
உன்மேல் அன்பு கொண்டவரை ஒரு போதும்
வெறுக்காதே! உன்னை நம்பியவரை ஒரு போதும்
ஏமாற்றாதே!
– சுவாமி விவேகானந்தர்





DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 0112330195